பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 28 புதன்கிழமை 12.02.2020 கதிர் 98

**இது ரகசியம் அல்ல!**

ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளிக் கட்சித் தலைவர் ஒருவருடன் நேற்றிரவு பேசிக் கொண்டிருந்தேன். ரணில் மீது உச்சக் கோபத்தில் இருந்தார்.

*“27 வருடங்களாகக் கட்சியின் தலைவராக இருந்து கட்சியை தேற்றி*

பக்கம் 02 »

## சஜித்தின் இதயத்தை ஏற்க மறுத்த ஆணையர்!

கொழும்பு, பெப். 12

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் புதிய கூட்டணியின் கீழ் இதயம் சின்னத்தைப் பயன்படுத்த சஜித் பிரேமதாஸ விடுத்த கோரிக்கையைத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நிராகரித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

சரத் பொன்சேகாவின் நெருக்கமான ஒருவரான சேனக்க என்பவருக்குச் சொந்தமான அப்பே ஜாதிக பெரமுன என்ற கட்சியின் பெயரை மாற்றி சமகி ஜாதிக பலவேகய என்று பெயரிடவும், அந்தக் கட்சியின் தொலை

பக்கம் 03 »

## வவுனியா வளாகத்தின் விடுதியில் கஞ்சாச் செடி?

வவுனியா, பெப். 12

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக விடுதியில், கஞ்சாச் செடியை ஒத்த செடி வகை ஒன்று, கைப்பற்றப்பட்டு வளாக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செடிகள் அங்கு வளர்க்கப்பட்டு மாணவர்களால் பயன்படுத்தப்பட்டதா என்ற சந்தேகம் நிலவி வரும் நிலையில், அந்தச் செடி தொடர்பில் வவுனியா வளாகத்தினரால் ஆராயப்பட்டு வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா

பக்கம் 02 »

## தீமையை நோக்கி எமது சமூகம் செல்வது வேதனையளிக்கிறது!

**வடக்கு மாகாண ஆளுநர் கவலை**

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.12

மற்றவர்களுக்கு தீமையளிக்கக்கூட நினைக்காத எமது சமூகம் இன்று தீமையை நோக்கிச் செல்வதைப் பார்க்கும் போது, எனக்கு மிகுந்த மனக்கவலையாக இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை

பக்கம் 02 »

# விக்கியின் புதிய கூட்டணி கூட்டமைப்பின் ‘பி’ அணி!

## கண்டுபிடித்தார் கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்ரவரி12

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கூட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ‘பி’ அணி. கூட்டமைப்புக்கும் இந்தக் கூட்டணிக்கும் கொள்கையில் வித்தியாசமில்லை. தமிழ் மக்களின் உண்மையான – நேர்மையான – தலைமைத்துவமாக எங்கள் தலைமைத்துவம் வந்துவிடக் கூடாதென்பதற்காகவே இந்தப் புதிய கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

– இப்படித் தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

பக்கம் 03 »



## போராட்டத்தை மழுங்கடிக்க முனைகிறார் கஜேந்திரகுமார்!

**காணாமற்போனோரின் உறவுகள் குற்றச்சாட்டு**

கிளிநொச்சி,பெப்.12

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைப் பிரித்து, போராட்டத்தை மழுங்கடிக்கும் சுயலாப அரசியலில், கஜேந்திரகுமார் ஈடுபட்டுள்ளார் என வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

பக்கம் 03 »

## கூட்டமைப்புக்கும் முன்னணிக்கும் விக்கி கூட்டணியால் தலையிடியாம்!

**சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு**

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 12

மாற்று அணி உருவாக்கத்தினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தலைவலியைச் சந்தித்துள்ளன என ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் –கட்டப்பிராயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பக்கம் 03 »

## கிளிநொச்சி வளாக பகிடிவதை; முறைப்பாடு கிடைக்கவில்லை

**வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு**

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ். பல்கலைகழக கிளிநொச்சி வளாகத்தில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான பகிடிவதை நடைபெற்றதாக வெளியான செய்திகள்

பக்கம் 03 »



## என் மீதான குற்றச்சாட்டை முடியுமானால் நிரூபியுங்கள்!

**விமலுக்கு சவால் விடுத்தார் ரிஷாத்**

கொழும்பு, பெப். 12

காணி உறுதிகளோ அல்லது வேறு எந்த மோசடிகளோ நான் செய்திருந்தால் அதனை நிரூபிக்குமாறு நான் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு சவால் விடுக்க விரும்புகிறேன். தேர்தல் காலங்களில் இப்படியான குற்றச்சாட்டுக்களை விடுப்பது

பக்கம் 03 »

## குடாநாட்டுக்கு நீர் விநியோகம்; அடுத்த வாரம் முக்கிய கூட்டம்



கொழும்பு,பெப்.12

யாழ்.குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்து முதலில் நடைமுறைப்படுத்தக் கூடிய

பக்கம் 02 »

## சஜித்தின் கூட்டணியை பதிவு செய்யவேண்டாம்

**தேர்தல் ஆணைக்குழுவிடம் ஐ.தே.கட்சி கோரிக்கை**

கொழும்பு, பெப். 12

சஜித் பிரேமதாஸ தலைமையில் அமையவுள்ள அரசியல் கூட்டணியான சமகி ஜாதிக்க பலவேகய என்பதை ஆங்கிலத்தில் குறிப்பிடும்போது United National Power என்று வருவதால் அது யு.என்.பி. என்று அர்த்தப்படுவதாகவும் – இதனால் யு.என்.பி. என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தனித்துவத்திற்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும் தேர்தல் ஆணைக்குழுவிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டச் செயலாளர் இதனை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளமையுடன் – இதன் காரணமாக சம்பந்தப்பட்ட கூட்டணியை இவ்வாறு பதிவு செய்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுள்ளார். (ஐ)

## ஒரு சதத்தையேனும் மத்திக்கு திருப்பி அனுப்பவேயில்லை!

**மஹிந்தவுக்கு விக்கி பதிலடி**

யாழ்ப்பாணம், பெப். 12

பிரதமர் பிறநாடுகளில் பேசும்போது உண்மையை அறிந்து பேசவேண்டும். உள்நாட்டில் அரசியல் மேடைகளில் பேசுவது போல் பேசக்கூடாது என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

என்னுடைய 5 வருட பதவிக்காலத்தில் ஒரு சதத்தையேனும் நாம் மத்திய அரசுக்குத்

பக்கம் 03 »

காலைக்கதிர் Kalaikathir



# விடுவிக்கப்பட்ட காணிகளை மக்கள் ஒரு மாதத்துக்குள் பாவிக்கவேண்டும்!

## காலக்கெடு விதித்தார் வடக்கு ஆளுநர்

விடுவிக்கப்பட்ட காணிகளை, இன்னும் ஒருமாதகாலத்துக்குள்மக்கள்பாவனைக்கு உட்படுத்தவேண்டும் என்று பிரதேச செயலாளர்கள் காணி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துமாறு, வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்தார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று பிரதேச செயலாளர்களுடனான விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இதன்போது, யாழ். மாவட்டத்திலுள்ள மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு, வீட்டுத்திட்டம், வீடமைப்பு என்பவற்றின் உண்மை நிலைவரங்களைப் பிரதேச செயலாளர்களிடம் தனித்தனியாக ஆளுநர் கேட்டறிந்து கொண்டார். இதன்போதே, ஆளுநர் மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார். (ஐ)

# யானை தாக்கி உயிரிழந்தவரின் சடலம் 2 நாள்களின் பின் மீட்பு!

மட்டக்களப்பு,பெப்.12

மட்டக்களப்பு – கிரான், தரவை காட்டுப் பகுதியில் யானை தாக்கி உயிரிழந்தவரின் சடலம் இரண்டு நாள்களுக்கு பின்னர் மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொம்மாதுறை வீதி, செங்கலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சவேந்திரன் (வயது–39) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி வயல் காவலுக்காகச் சென்ற நபரை தரவை காட்டுப் பகுதியில் இருந்து வந்த யானை தாக்கி காட்டுப் பகுதிக்குள் தூக்கி எறிந்துள்ளது. இதன் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலம் பொதுமக்களின் உதவியுடன் மீட்கப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ‘றாகிங்’ மாணவனின் வீடு மீது தாக்குதல்

பகிடிவதைக் குற்றச்சாட்டு விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகங்களுக்குள் உள்நுழைய இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட மாணவனின் வீட்டுக்குச் சென்ற நால்வர், மாணவன் அங்கு இல்லாத நிலையில் வீட்டிலிருந்த பொருள்களை அடித்து உடைத்துவிட்டுச் சென்றுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்றது.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளாகத்தினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, கஞ்சாச் செடியை போன்ற செடி வகை கைப்பற்றப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது கஞ்சாச் செடியா அல்லது வேறு தாவர வகையைச் சேர்ந்ததா என ஆராயப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தனர். (ஐ)

## தீமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்–

ஊடகங்களுடன் இணைந்து செயற்படவே விரும்புகின்றேன். வடக்கு மாகாண மக்களுக்கான சேவைகளை என்னால் மாத்திரம் தனியே முன்னெடுக்க முடியவில்லை. எல்லோருடைய ஒத்துழைப்புடன் முன்னெடுக்கவே விரும்புகின்றேன்.

ஒரு விடயத்தைச் செய்யும்போது அதன் சாதக , பாதக விடயங்களைக் கலந்தாலோசித்து ஒரே பாதையில் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுப்போம்.

மக்களுக்கு கிடைக்கவேண்டியை, கிடைக்காமல் இருப்பவற்றைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். எனது குறுகிய காலத்துக்குள் மக்களுக்கான சேவைகளைத் துரித கதியில் முன்னெடுப்பேன். அரசியல் என்பது எனக்கு அப்பாற்பட்டது. எனக்கு ஆக்கபூர்வமான செயற்திட்டதை முன்னெடுப்பதே நோக்கம்.

யாழ்ப்பாண மக்களுக்குக் கலாசாரம் சொல்லிக் கொடுக்க தேவையில்லை. ஆனால் இன்று இந்த நிலைமை இங்கில்லை என்றே தோன்றுகின்றது.

தேசவழமைச் சட்டத்தின் கீழ் மற்றவர்களுக்கு தீங்கில்லாமல் வாழ்ந்தவர்கள் இன்று தீமையை நோக்கி செல்கின்றனர். இதனை தடுத்து நிறுத்துவதே எனது நோக்கம். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் – என்றார். (ஐ–07)

## குடாநாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தை முன்மொழிவு செய்வதற்கு என முக்கிய கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பில் இடம்பெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத்தத் திட்டத்துக்கு முன்மொழியப்பட்டுள்ள 4 திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையிலும் உடனடியாக ஆரம்பிக்கக் கூடியதுமான திட்டத்தைத் தெரிவு செய்யுமிடத்துக்கு அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதாக நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

யாழ். குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் உள்ளிட்டவற்றின் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே. காதர் மஸ்தான், வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இதன்போது யாழ்.குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை முன்னெடுக்க இரணைமடு நீர் விநியோகத் திட்டம், கடல் நீரை குடிதண்ணீராக மாற்றும் திட்டம், பாலி ஆறு திட்டம் மற்றும் வடமராட்சி களப்புத் திட்டம் என்பன முன்மொழியப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இரணைமடு திட்டத்துக்கு 947 கோடி ரூபாயும் கடல் நீரை குடிதண்ணீராக மாற்றும் திட்டம் 815 கோடி ரூபாயும் பாலி ஆறு திட்டத்துக்கு 1034 கோடி ரூபாயும் வடமராட்சி களப்பு நீர் விநியோகத் திட் டத்துக்கு 2116 கோடி ரூபாயும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன என்று அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையிலேயே குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத்தத் திட்டத்துக்கு முன்மொழியப்பட்டுள்ள 4 திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையிலும் உடனடியாக ஆரம்பிக்கக் கூடியதுமான திட்டத்தை தெரிவு செய்யுமிடத்துக்கு அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதாக நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் மழை நீரை சேகரித்து மேற்கொள்ளப்படும் பெரியளவிலான குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் வடமராட்சி களப்பு பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் 30ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தை இரண்டு வருடங்களில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அப்போது தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்த நீர் விநியோகத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாமலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் நேற்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். (ஐ–07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*நிமிர்த்த முடியாதவராக – இலாயக்கில்லாதவராக – போன தலைவர் அவர். தம்மால் அந்தக் கட்சியை நிமிர்த்த முடியாது என்பது அவருக்கு நன்கு தெரியும். அந்தக் கட்சியின் யாப்பில் தமக்குச் சாதகமாக உள்ள சில ஏற்பாடுகளை வசமாகப் பயன்படுத்தி, கட்சித் தலைமைப் பதவியைக் கெட்டியா கப்பிடித்து வைத்துக் கொண்டு, பிடிவாதம் பண்ணிக் கொண்டிருக்கின்றார். குறைந்த பட்சம் ஒரு பயனுள்ள – வலிமையான – எதிர்க்கட்சியாகத் தன்னும் ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுவதற்கு இடமளிப்பதில்லை என்று சிறுபிள்ளைத்தனமாக அழிச்சாட்டியம் பண்ணிக் கொண்டிருக் கின்றார்."*– என்று பெரும் விசனத்துடனும் எரிச்சலுடனும் கூறினார் அவர்.

கட்சியையும், எதிர்க்கட்சிக் கூட்டையும் வலுமிக்கதாகவும், ஜனரஞ்சனமானதாகவும் முன்நகர்த்த சஜித் பிரேமதாஸா எடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டுக் குழப்பும் வேலையில் ரணிலுடன் சேர்ந்து ரவி கருணநாயக்காவே தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார் என்று குற்றம் சுமத்தினார் அந்த பங்காளிக் கட்சித் தலைவர்.

*"ரணிலும் ரவியும் கூட்டுச் சேர்ந்து செய்யும் இந்த நாசகார காய் நகர்த்தல்களினால் ஐ.தே.கட்சிக்கு மட்டும் பாதிப்பல்ல, அதனுடன் கூட்டுச் சேர்ந்த கட்சிகளுக்கும் கூட மட்டும் பாதிப்பல்ல, ஒட்டு மொத்த நாட்டுக்குமே பாதிப்பு.*

*"ஒரு சர்வதிகாரப் போக்குடைய ஆட்சிப் பீடத்துக்கு எதிராக ஒரு வலுவான எதிர்க்கட்சி கட்டுறுதியுடன் செயற்படுவதற்கான வாய்ப்பைரவி – ரணில் கூட்டு ஆப்படித்துத் தடுத்துக்கொண்டிருக்கின்றது.*

*"அவர்களின் செயற்பாடுகள், போக்குகளைப் பார்த்தால் ராஜபக்ஷக்களின் மறைமுக நிகழ்ச்சித் திட்டத்தை அவர்கள் முன்னெடுத்துச் செல்கின்றார்களோ என்ற சந்தேகம் எமக்குத் தோன்றுகின்றது."* என்றார் அந்தத் தலைவர்.

இப்போதுள்ள நிலைமை குறித்து ஆராய்ந்து அடுத்த கட்ட முடிவுகளை எடுப்பதற்காக சஜித் பிரேமதாஸவின் கொழும்பு இல்லத்தில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மனோ கணேசன், திகாம்பரம், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், சம்பிக்க ரணவணக்க ஆகியோர் இன்று கூடுகின்றார்கள்.

அதன் முடிவில் தீர்க்கமான ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என பங்காளிக் கட்சித் தலைவர்கள் நம்புகின்றனர்.

அத்தகைய தீர்மானத்தை முறியடித்துச் சமாளிப்பதற்கு ‘ரணில் அண்ட் ரவி கம்பனி’ என்ன காய் நகர்த்தலைச் செய்யுமோ தெரியாது.

பொறுத்திருந்து பார்ப்போம்.

★ ★ ★

கடந்த இண்டரை மாதங்கள் வெளிநாட்டில் இருந்து விட்டு – அஞ்ஞாதவாசம் முடித்து – நாடு திரும்பிய பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷவுக்கு மீண்டும் அரசியல் ஆசை வந்து விட்டது போலும் என்று கூறினார் தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவர்.

அமெரிக்க இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் பஸில். அவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதாயின் 19 ஆவது திருத்தப்படி அமெரிக்கா பிரஜாவுரிமையைத் துறக்க வேண்டும். அதைத் துறக்கும் எண்ணமும் அவருக்கு இல்லை, தேர்தலில் போட்டியிடும் விருப்பமும் அவருக்கு இல்லை என்றே இதுவரைக் கூறப்பட்டு வந்தது. ஆனால் இப்போது தேர்தலில் நின்று எம்.பியாகி, மீண்டும் அமைச்சராகும் ஆசை அவருக்கு வந்து விட்டது என்றார் அந்த ஊடக நண்பர்.

அவர் அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்து, அதற்கான சான்றிதழைப் பெறுவதாயின் அதற்கு இரண்டு, மூன்று மாதங்களாவது தேவை. அதுவரை தேர்தலைத் தள்ளிப் போட்டால் என்ன என்று அவர் யோசிக்கின்றாராம்.

ஆனால், பொதுஜன பெரமுனவின் சில முக்கிய தலைவர்கள் மேலும் கால தாமதம் ஏதுமின்றி இயன்றவரையில் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். புதிய ஜனாதிபதியினதும் அவரது அரசினதும் செல்வாக்கு ‘காற்று இறங்க முன்’ தேர்தல் பந்தை அடித்து முடித்து விட வேண்டும் என்பது அவர்கள் விருப்பம்.

பஸிலுக்கு விருப்பம் என்றால் அமெரிக்கக் குடியுரிமைச் சான்றிதழ் அவரது கைக்கு வந்ததும் தேசியப் பட்டியல் மூலம் அவருக்கு (பஸிலுக்கு) ஒரு எம்.பி. பதவியை வழங்கி அவர் விரும்பும் அமைச்சர் பதவியையும் கொடுக்கலாம் என்று அந்தத் தலைவர்கள் கூறுகின்றனராம்.

ஆனால் தாம் கடைசியாகப் போட்டியிட்ட 2010 ஏப்ரல் பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் நான்கு லட்சத்து 25 ஆயிரம் விருப்பு வாக்குகள் எடுத்து சாதனை படைத்தவர் பஸில். அவர் தேர்தலில் நின்று வெற்றி பெற்று, எம்.பியாவதையே விரும்புகின்றார். ஆகையால் தேர்தலில் நிற்பதற்கான தகுதி தமக்குக் கிட்டும் வரை – அமெரிக்கக் குடியுரிமைத் துறப்புப் சான்றிதழைத் தாம் பெறும் வரையில் – தேர்தலை பின்தள்ளுவதுதான் அவர் விருப்பம் என்று தகவல் வெளியிட்டார் அந்த ஊடகவியலாளர்.

ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்க வேண்டும் என்பது போன்றதுதான் பஸிலின் எதிர்பார்ப்பு. அது நடக்குமா? தெரியவில்லை.

இதற்கிடையில் அதே தென்னிலங்கை ஊடகவியலாளர் நேற்றிரவு 10 மணியளவில் மீண்டும் ஒரு தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

*"24, 25 ஆம் திகதிகளில் அமெரிக்க அதிபர் டிரம்ப் புதுடில்லி மற்றும் குஜராத்துக்கு விஜயம் செய்கின்றார். தெரியுமா?"* என்றார்.

*"ஆம்'* என்று பதிலளித்தேன் நான்.

*"அச்சமயத்தில் புதுடில்லியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை அவர் சந்திக்கின்றார் என்று ஒரு பேச்சு கொழும்பு ஊடக வட்டாரங்களில் அடிபடுகின்றது. அது உண்மையா? உங்களால் உறுதிப்படுத்த முடியுமா?"*– என்று கேட்டார்.

*"இப்போது நேரம் பத்து மணி தாண்டி விட்டது. இனி யாரிடம் கேட்டு உறுதிப்படுத்துவது? சுமந்திரனும் கனடாவில் நிற்கின்றார். கனடா விசிட் நடுவில் அவர் வொஷிங்டனுக்கும் போவார் என ஒரு பேச்சடிபட்டது. இந்தப் புதுடில்லி சந்திப்பு ஏற்பாட்டுக்குத்தானோ தெரியவில்லை. எதற்கும் 24 மணி நேரம் தாருங்கள். சம்பந்தப்பட்ட வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துகிறேன்."* என்றேன் நான்.

*"என்ன பத்திரிகையாளர் நீர்...? இத்தகைய செய்தியை உண்மையா, பொய்யா என்று உடனடியாகக் கேட்டு அறிந்து உறுதிப்படுத்த முடியாத நீங்கள் எல்லாம் ஏன்தான் பத்திரிகையாளர் தொழிலுக்கு வந்தீர்களோ?"*– என்று கோபித்தார் அவர்.

வயதான சம்பந்தன் ஐயாவுடன் இரவு 9 மணிக்குப் பிறகு பேச வாய்ப்பில்லை. மாவை சேனாதிராஜா இந்தியாவில். கனடாவில் உள்ள சுமந்திரனுடனும் நினைத்த நேரத்தில் தொடர்பு எடுக்க முடியாத சிக்கல். இவர்களைத் தவிர கூட்டமைப்பில் இத்தகைய விடயத்தைப் பற்றிப் பேசவும் யாரும் இல்லை. யாரிடம் கேட்பது? அந்தப் பத்திரிகையாளரின் உரிமையுடனான கோபத்தை கேட்டுச் சமாளிப்பதைத் தவிர எனக்கு வேறு என்ன வழியுண்டு?

–மின்னல்–

## கூட்டமைப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் வழங்கிய ஆணைகளில் இருந்து விலகி, வேறு வழியில் தடம்மாறி சென்றதன் காரண மாகவே, புதிய கூட்டணி உருவா கியது. புதிய கூட்டணி மூலம், தமிழ் மக்களுக்கான பிரச்சினை களை பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் களம் அமைத்துள் ளோம்–என்றார். (ஐ-07)

## என் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வாடிக்கையாகி விட்டது. நான் மோசடியில் ஈடுபட்டிருந்தால் அதற்கு ஆதாரத்தை காட்டி நிரூ பிக்காமல் வெறுமனே எழுந்த மானமாக கூறக் கூடாது.

–இவ்வாறு சவால் விடுத்துள் ளார் நாடாளுமன்ற உறுப்பின ரும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரிஷ் பதியுதீன்.

கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

சஹ்ரான் சதொச வாகனங் களைப் பாவித்தார் என்று முன் னர் கூறினார். அதற்கு என்னா யிற்று? சிங்கள மக்களைத் தவ றான வழியில் நடத்தி அரசியல் ஆதாயம் தேட வீரவன்ஸ முயல் கிறார். எனது அமைச்சு வாகனங் களை சஹ்ரான் குழுவினர் பயன்படுத்தியிருந்தால் விசா ரணை செய்து அதற்கு நடவ டிக்கை எடுத்திருக்கலாமே ? எனக்கு அமெரிக்காவிலோ அல் லது எந்தவொரு நாட்டிலோ வங்கிக் கணக்கு கிடையாது. காணி உறுதிகள் என்னிடம் இருக் கின்றன என்று சொன்னதெல் லாம் அப்பட்டமான பொய். அப் படியான காணிகள் இருந்தால் அவற்றை அரச உடைமைக ளாக்குமாறு நான் ஏற்கனவே பல தடவை கூறியிருக்கிறேன். சதொசவில் நான் மோசடி செய் தேன் எனக் கூறப்பட்டது. நான் அமைச்சு கேள்விமனு விடயங் களில் ஒருபோதும் தலையிட் டவனல்லன். எனவே என் மீதான குற்றச்சாட்டுக்களை நான் நிரா கரிக்கிறேன். என் நற்பெயரைக் களங்கப்படுத்தியமைக்காக அவர் மீது 100 கோடி ரூபா மான நஷ்ட வழக்குத் தாக்கல் செய்ய சட்டத் தரணி மூலம் அறிவித்துள்ளேன். அவர் அதற்கு இரு வாரத்துக் குள் பதில் தராவிட்டால் வழக்கு தொடுக்கப்படும்.

குற்றச்சாட்டை அவர் சுமத்து கின்றமையால் – அவரது ஆட்சி இருப்பதால் – இவை உண்மை யாக இருந்தால் நிரூபிக்க வேண் டும். சி.ஐ.டி. தனது வேலையை செய்யவேண்டும். விமல் வீர வன்ஸ போன்ற அரசியல்வாதி களை வைத்து சி.ஐ.டி. செயற்படக் கூடாது. வில்பத்து காடுகளை நான் அழிக்கிறேன் எனக் கூறி னார்கள். அதனை விசாரிக்கு மாறு நான் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன். ஈஸ்டர் தினத் தாக்குதல் குறித்தும் விசாரணை செய்யுமாறு நான் ஜனாதிபதியிடம் கோரினேன். தவறு செய்தால் இப்படி கோரு வோமா?–என்றார். (ஐ)

## போராட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறவுகள் பகிரங்கமாகக் குற் றம்சாட்டியுள்ளனர்.

நேற்று முற்பகல் 11.30 மணி யளவில் கிளிநொச்சியில் அமைந் துள்ள வலிந்து காணாமல் ஆக் கப்பட்டவர்களின் உறவுகளின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு குற்றம் சாட் டினர்.

ஊடக சந்திப்பில் கருத்து தெரி வித்த வடக்கு–கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா,

வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளுக்காக நாம் நீண்டகாலப் போராட்டத் தைத் தொடர் போராட்டமாக முன் னெடுத்து வருகின்றோம். இந்த நிலையில் இந்தப் போராட்டத் தைப் பாதிப்படையச் செய்யும் வகையிலும், காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தைப் பலவீனப்படுத் தும் வகையிலும் இன்று அரசி யல்வாதிகளுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலை எமக்கு ஏற்பட் டுள்ளது.

அண்மைக் காலமாக காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவு களின் போராட்டத்தைச் சிதைத் தும், பிரித்தும் புதிய அமைப்புக் களை உருவாக்கும் செயற்பாடுக ளில் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் ஈடுபட்டுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற போராட்டத்தில் கஜேந்திரகுமார் அணியினர் இவ்வாறான செயற் பாட்டை ஆரம்பித்துள்ளனர். இந்தப் போராட்டத்தில் பாதிக்கப் பட்ட தாய்மார் குரல் எழுப்ப வில்லை. அவ்வாறு பாதிக்கப் பட்டவர்கள் தமது குரலை எழுப் பியிருந்தால் நாமும் அவர்களு டன் இணைந்திருப்போம். அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் கஜேந்திரகுமாரின் அமைப்பாளர் ஒருவரே மக்கள் சார்ந்து குரலை எழுப்பியிருந்தார். உண்மையில் குறித்த செயற்பாடு பலராலும் பேசப்பட்டது.

கஜேந்திரகுமார் கொழும்பில் வளர்ந்தவர். அவர் தென்னி லங்கை மக்களோடு தனது உறவு களை அதிகமாக வளர்த்தவர். இன்று தமிழ் மக்களுக்கு ஏதோ செய்யப்போவதாகக் கூறிக் கொண்டு இவ்வாறான செயற் பாடுகளை முன்னெடுக்கின்றார்.

இவர் இந்தியாவில் திரும ணம் செய்து பிள்ளைகளை வெளிநாடுகளில் வளர்க்கின்றார். பிள்ளைகள் வெளிநாட்டுப் பிர ஜைகளாக வளர்க்கப்படுகின் றனர். இவ்வாறான நிலையில் எமது பிரச்சினைகளை இவர் தமது அரசியல் சுயலாபத்திற் காகவே பயன்படுத்துகின்றார் என்பதே உண்மை. இந்த உண் மையை மக்கள் அனைவரும் உணர வேண்டும்.

இவர் அரசியலுக்கு வரும் போது இவருக்குத் தமிழ் பேசத் தெரியாது. இப்போது அவர் தமிழ் பேசுகின்ற போதிலும் இவர் தென் னிலங்கையில் அதிகமாக உற வில் இருந்தமையால் சரளமா கப் பேசத் தெரியாத நிலையி லேயே அரசியலுக்கு வந்தார். இவர் எமது போராட்டத்தைப் பற்றி பேசுவதற்குத் தகுதியற்றவர். எமது போராட்டம் தவறானது என்று கூறுவதெனில் சரியா னதை சுட்டிக்காட்டவேண்டும்.

எமது போராட்டம் இடம்பெற்ற போது ஒரே ஒருமுறை மாத்திரமே எமது போராட்டப் பந்தலுக்கு இவர் வருகை தந்திருந்தார். பின்னர் ஒருபோதும் இவர் வருகை தந்தி ருக்கவில்லை. இவ்வாறான நிலையில் எம்மைக் குற்றம் சாட் டிப் புதிதாக அமைப்புக்களை உருவாக்குவது இவரது சுயநல அரசியலையே வெளிக்காட்டு கின்றது. இவர் சுயமாகவே ஒரு வரை ஒருவர் குறை கூறுபவராக இருக்கின்றார். ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் குறை கூறிக்கொண்டு இருந் தவர் இன்று விக்னேஸ்வரனைக் குறை கூறுகின்றார். இவர் வாழ்வு குறை கூறுவதாகவே காணப் படுகின்றது.

நாம் ஓ.எம்.பி. அலுவலகத்தை எப்போதும் ஆதரித்தவர்கள் அல்லர். சர்வதேசம் அந்த அலு வலகத்தை நம்பும் வகையில் ஒத்துழைக்குமாறு கூறியது. அந்த அலுவலகத்தால் எதையும் செய்ய முடியாது என்பதை சர்வ தேசத்துக்கு எடுத்து கூறுவதற் காக நாம் சில முக்கிய சாட்சிகளு டன் கூடிய காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளது விட யத்தைக் கண்டுபிடித்து தரு மாறும் மூன்று மாதம் கால அவகாசம் கொடுத்தோம். அது இன்றுவரை இடம்பெறவில்லை.

இந்த நிலையில் சர்வதேசத் திடம் அந்த உண்மையை வெளிப் படுத்த உள்ளோம். இவர்களால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு எந்தவொரு விட யத்தையும், நீதியையும் பெற்றுக் கொடுக்க முடியாது என்ற உண் மையைக் கொண்டு செல்ல உள்ளோம்.

இவ்வாறான சூழலில் தமது சுயலாபத்திற்காக கஜேந்திரகு மார் பொன்னம்பலம் அணியினர் செயற்படுகின்றனர். இந்தச் செயற் பாடுகளுக்கும் தமக்கும் தொடர்பு இல்லை என அவர்கள் தெரி விக்கின்றபோதிலும், எம்மிடம் அவற்றுக்கான ஆதாரம் உள்ளது.

கிழக்கில் இடம்பெற்ற போராட் டம் ஒன்றில் புதிதாக உருவாக்கப் பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர் கள் தொடர்பான அமைப்பொன் றின் இரு வேறு மாவட்ட தலை விகளுக்கு மத்தியில் செ.கஜேந்தி ரன் நின்ற புகைப்படங்கள் உள்ளன.

இவ்வாறு பல உண்மைகள் எம்மிடம் உள்ளன. எனவே மக் கள் இவர்களை அடையாளம் கண்டு, இவர்கள் தமது சுய இலாப அரசியலுக்காக எடுக்கும் முயற் சிகளுக்கு பதில் கொடுக்க வேண் டும்–என்றார். (ஐ)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பில் எனக்கு எந்த முறைப் பாடும் கிடைக்கவில்லை என வடக்கு மாகாண ஆளுநர் திரு மதி பி.எம்.எஸ். சாள்ஸ் தெரிவித் தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளு நர் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் பகிடிவ தைகள் நடைபெற்றமை தொடர் பில் ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டேன். அதன் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுப்பதில் சில தடங் கல்கள் உள்ளன.

எனவே பாதிக்கப்பட்டவர்கள் எவரேனும் ஒருவர் முறைப்பாடு செய்தால் , அந்த முறைப்பாட் டின் அடிப்படையில் துரித நட வடிக்கைகளை முன்னெடுத்து குற்றவாளிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்வேன்.

பாதிக்கப்பட்ட தரப்பு தைரிய மாக முன்வந்து முறைப்பாடு செய்வதற்கு அனைவரும் ஒத் துழைப்பு நல்கினால் குற்றவாளி களைத் தண்டிக்க முடியும் –என் றார். (ஐ-07)

## ஒரு சதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) திருப்பி அனுப்பவில்லை என வும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விக்னேஸ் வரன் சரியாகப் பயன்படுத்தவில் லை என்றும் திருப்பி அனுப்பி விட்டார் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவில் தெரி வித்த கருத்து தொடர்பாக வரம் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள் ளார்.

(இக்கேள்வி பதிலின் முழு விவரம் 8ஆம் பக்கத்தில்)

## சஜித்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பேசிச் சின்னத்தை மாற்றி இத யம் சின்னத்தைப் பயன்படுத்த வும் சஜித் தரப்பு கோரிக்கை விடுத்திருந்தது .

ஆனால் இந்தக் கோரிக்கை கிரமப்படி விடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ள தேர்தல் ஆணைக்குழுத் தலைவர், முறை யான ஆவணங்களுடன் இது தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட் டால் அது குறித்துப் பரிசீலனை செய்யமுடியுமென சஜித் தரப் புக்கு அறிவித்துள்ளார். (ஐ)

## விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழ்ப்பாணத்தில் உள்ள அந் தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

நான்கு நபர்கள் கூடி,நான்கு கட்சிகள் கூட்டுச் சேர்ந்தன எனச் செய்திகள் வெளிவந்து இருக் கின்றன. எம்மைப் பொறுத்த வரை அது நான்கோ, பத்தோ, பதினைந்தோ என்பதல்ல, உண் மையில் எந்த அடிப்படையில் அரசியல் ரீதியாகச் செயற்படுகின் றனர் என்பதே முக்கியமானது.

நாம் – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – கூட்டமைப்பில் இருந்து விலகிய நாளில் இருந்து நாங்கள் கொள்கை ரீதியாக அந்தக் கூட்டமைப்பு பிழை விடு கிறது, ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்குகின்ற அள வுக்கு விலை போயிருக்கிறது என்ற குற்றச்சாட்டைப் பத்து வரு டங்களாக முன்வைத்து வருகின் றோம்.

அந்த அடிப்படையில் ஒரு புதிய தலைமைத்துவம் – நேர்மை யான தலைமைத்துவம் அவ சியமென்ற வகையில் இந்தப் பத்து வருடங்களாக இயங்கி வந்த நிலையில் இன்று இரண் டாம் பெரும் கட்சியாக வடக்கு– கிழக்கில் இருக்கிறோம். அப்படிப் பட்ட ஒரு நிலைமை இருக்கை யில் எங்கள் வளர்ச்சியைத் தடுப் பதற்காக கொள்கை ரீதியாக எந்தவிதமான–அதாவது கூட் டமைப்பிலிருந்து எந்தவிதமான – வித்தியாசமும் இல்லாமல் இன் னுமொரு மாற்று அமைப்பு என்று கூறிக் கொண்டு ஒரு சிலர் ஒன்று சேர்ந்து இந்தத் தேர்தலில் எங் களுக்கு வரக் கூடிய அங்கீகா ரத்தை ஏதோவொரு வகையில் குழப்புவதற்குச் செயற்பட முயற் சிக்கின்றார்கள். அந்த வகையில் தான் இந்தப் புதிய கூட்டு முயற்சி களை பார்க்கின்றோம்.

எம்மைப் பொறுத்தவரை இன் றைக்கு நேர்மையான அரசி யலை – கொள்கை சார்ந்த அர சியலைக் கொண்டு போகக் கூடிய ஒரே ஒரு தரப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். இந்த முன்னணியுடன் இணைந்து செயற்படுகின்ற சிவில் சமூகம், புத்திஜீவிகள் இந்த இனத்துக்குத் தலைமை தாங்கக் கூடாது என்ற சிந்தனையில் பலரும் செயற் படுகின்றனர். ஏனென்றால் எங் கள் தரப்பினர்கள் நேர்மையா னவர்கள். அவர்களை ஏமாற்ற முடியாது என்ற சிந்தனை அவர் களுக்கு இருக்கின்றதென்றால் தமிழ் மக்களை எவருமே தங்க ளின் தேவைக்காகப் பாவித்து நடுத்தெருவில் விட முடியாது என்பதுதான் எங்கள் நிலைப் பாடாக இருப்பதே காரணமாக அமைகின்றது.

தமிழ் மக்கள் ஒரு புதிய தலை மைத்தவத்தைத் தேடிக் கொண் டிருக்கின்ற நிலைமையில் –அந் தப் புதிய தலைமைத்துவம் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக அடையாளப்படுத்தப்பட்ட நிலை யில் – முன்னணி இந்த நாடாளு மன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெறக்கூடாதென்பதற் காக எங்களிடம் வரக்கூடிய மிகப் பெரிய அங்கீகாரத்தை ஏதோ வொரு வகையில் உடைப்பதற்கு– வாக்குப் பலத்தைக் குறைப்ப தற்கு எடுக்கின்ற ஒரு முயற்சி யாகத்தான் நாங்கள் இதைப் பார்க்கின்றோம். எல்லாவற்றை யும் தாண்டி தமிழ்த் தேசியமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யும் நிச்சயமாக வெற்றி பெறும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இந்தக் கூட்டணி நிச்சயமாக எங்களது வாக்கு வங்கியை சரிக் காது. கடந்த உள்ளூராட்சித் தேர் தலில் கூட எங்கள் வாக்கு வங் கியைக் கடைசிநேரத்தில் சரிப்ப தற்காக இந்தியாவின் ஆதர வோடு இன்னொரு கூட்டு என்ற பெயரில் சுரேஷ் பிறேமச்சந்தி ரனும் ஆனந்தசங்கரி போன்ற வர்களும் கூட்டுச் சேர்ந்துத் தாங் கள்தான் உண்மையான மாற்று என்று சொல்லித் தேர்தலில் போட் டியிட்டார்கள். அந்த நேரத்தில் விக்னேஸ்வரனும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தார் என்பதும் அனைவருக்கும் தெரிந்த விட யம். அப்படியிருக்கவும் அந்தக் கூட்டுக்கு மக்கள் எந்தவித அங் கீகாரத்தையும் கொடுக்கவில்லை. மாறாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குத்தான் அங்கீகா ரத்தைக் கொடுத்திருந்தனர்.

அன்றைக்கு கூட எங்களுக்கு எதிராக முன்வைத்த விமர்சனம் என்னவென்றால் நாங்கள் ஒரு தனிப்போக்கு என்றும், நாங்கள் யாருடனும் கூட்டுச் சேர விருப்ப மில்லை, ஒரு நாளும் மக்களால் அங்கீகரிக்கக் கூடிய தரப்பு இல்லை என்ற வகையில்தான் அனைத்துத் தரப்புக்களும் எங் களை விமர்சித்தார்கள். ஆனால் மக்கள் அப்படிப் பார்க்கவில்லை.

மக்கள் மிகத் தெளிவாக எங் களுக்குத்தான் புதிய தலைமைத் துவம் என்ற விடயத்தில் விருப் பத்தை தெரிவித்திருக்கின்றார் கள். அதில் அறுதிப் பெரும்பான் மையை ஈட்டி சபைகளைக் கைப் பற்றாவிட்டாலும் ஊழலுக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறோம். நேர்மையான கலாசாரத்தை வெளிப்படுத்தி வருகின்றோம் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

வரப் போகின்ற தேர்தல் ஒரு நாடாளுமன்ற தேர்தலாக இருக் கிறது. ஒட்டுமொத்த தலைமைத் துவத்தை தீர்மானிக்கின்ற ஒரு தேர்தலாக பார்க்கப்படுகின்ற போது தமிழ் மக்கள் எங்களுக் கான அங்கீகாரத்தை நிச்சயம் கொடுப்பார்கள் என்று தான் நம்பு கின்றோம். கடந்த உள்ளூராட்சித் தேர்தலையும் விட பல மடங்கு மேலாக நாங்கள் பலப்பட்டு நிச்ச யமாக தனிப்பெரும் கட்சி என் பதை இந்தத் தேர்தலில் நாங் கள் நிரூபித்துக் காட்டுவோம்– என்றார். (ஐ-07)

காலைக்கதிர் Kalaikathir



## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தமிழர் தலைவிதி இது

மிக விரைவில் – அடுத்த இரண்டரை மாதத்திற்குள் – நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறப் போவது எவ்வளவு உறுதியோ, அவ்வளவு தூரம் அந்தத் தேர்தலைத் தமிழர் தரப்புப் பல பிரிவுகளாகப் பிரிந்து நின்று எதிர்கொள்ளப் போகின்றது என்பதும் உறுதியாகும்.

முள்ளிவாய்க்காலுடன் முடிவுற்ற ஆயுதப் போராட்டத் தோல்விக்குப் பின்னர், அரசியல் ரீதியாகப் பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும் ஒரு பேராபத்தில் தமிழினம் நிற்கின்றது.

ஆயுதப் போராட்ட வீழ்ச்சிக்குப் பின்னரான சூழலில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே 'தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகள்' என்ற அந்தஸ்தைத் தமிழ் மக்கள் வழங்கியிருந்தனர்; வழங்கியிருக்கின்றனர். இந்த வகையில் தமிழ் மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் என்ற அந்தஸ்து தமிழ்க் கூட்டமைப்பிற்கே கிட்டியது. அந்தப் பிரதிநிதித்துவ உரிமை இன்று வரை நீடிக்கின்றது.

அதைக் கூட்டமைப்பு தக்க வைக்குமா என்பதே இன்றைய கேள்வியாகும்.

கூட்டமைப்பில் இருந்து பிரிந்து போன தரப்புகள் 'தமிழ் மக்கள் தேசிய கூட்டணி' என்ற பெயரில் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் தலைமையில் ஒன்றிணைந்துள்ளன.

வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடு வரை அந்தக் கூட்டணியினர் தமக்குள் சமரசம் செய்து விட்டனர் என்றும் தகவல்.

ஒரு புறம் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இன்னொரு புறம் – தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி. மற்றொரு புறம் – கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி. தவிரவும், ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் பிறிதொருபுறம்.

இந்த நான்கு தரப்புகளுமே தமிழ்த் தேசியத்தின் பெயரால் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் களத்தில் இறங்கி முட்டி மோதப் போகின்றன.

தேசியம் பற்றிய கொள்கைக் கோட்பாட்டு மோதல் என்பதால் தமிழர் தேசியம் பற்றிய அடிப்படைகள் பிய்த்து உதறப்படும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கைத் தீவில் தமிழர்கள் தனியான தேசிய இனம், அவர்களுக்குத் தீவின் வடக்கிலும் கிழக்கிலும் தனியான பூர்வீகத் தாயகம் உண்டு, அதனால் இந்தத் தீவில் தமிழர் தேசியமும், தமிழர் தேசமும் மறுக்கப்பட முடியாத விடயங்கள், தமிழர் தேசத்துக்குக் காலாதி காலமாக இறையாண்மையும், அதனடிப்படையில் சுயநிர்ணய உரிமையும் உண்டு – இந்த அடிப்படைகளை வைத்துக் கொண்டுதான் தமிழர் தரப்புக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய ஒரு நீதியான – கௌரவமான – தீர்வு வேண்டும் என்ற கோரிக்கையைத் தமது பிரதான பேசு பொருளாக வைத்து, இந்தத் தரப்புகள் நான்கும் இந்தத் தேர்தலில் மோதப் போகின்றன என்பது வெளிப்படை.

இந்த விடயங்களை விளக்குவதில் – பிரதிபலிப்பதில் – வலியுறுத்துவதில் – இந்தத் தரப்புகள் இடையே கொஞ்சம் கூடக் குறைய வித்தியாசம் இருக்கலாம். ஆனால் அவை வற்புறுத்தப் போகும் மூல விவகாரம் ஒன்றாகத்தான் இருக்கப் போகின்றது.

இந்த மூல விடயத்தை எட்டுவதற்காகத்தான் அவை கன்னை கட்டிப் பிரிந்து நின்று ஆளை ஆள் தாக்கப் போகின்றன.

இப்படிப் பிரிந்து நின்று– அணி கட்டி – மோதுவதனால் சாதிக்கப் போவது யாது என்பதே கேள்வி.

தமிழர் தேசத்தை – தேசியத்தை – பேணிப் பாதுகாத்துத் தக்க வைப்பதில் உறுதியாகவும், தெளிவாகவும், மிகுந்த அர்ப்பணிப்புடனும், விடா முயற்சியுடனும் தாம் இருப்பதாக ஒவ்வொரு அணியும் வலி யுறுத்தும். மாற்றுத் தரப்புகள் எல்லாம் இவற்றைக் கைவிட்டு விட்டு, தமிழர் தேசத்தை – தமிழர் தேசியத்தை – காட்டிக்கொடுப்பன என்று முழங்கவும் அவை பின்னிற்கப் போவதில்லை.

ஆனால், உண்மையில் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் – நடந்தவற்றையும், நடக்கின்றவற்றையும், நடக்கப் போகின்றவை தொடர்பான எதிர்வு கூறல்களையும் சீர்தூக்கிப் பார்தால் – இப்படி அணி பிரிந்து நிற்பதன் மூலம் அவை ஒவ்வொன்றும் தமிழர் தேசத்துக்கும் தேசியத்துக்கும் ஆப்பு வைக்கும் பெரும் கோடரிக் காம்பு வேலையையே செய்து கொண்டிருக்கின்ற என்ற துன்பியல் நிதரிசனம் புரிய வரும்.

இப்படி சமூகத்துக்கும், இனத்துக்கும் பெரும் பின்னடைவையும் பாதிப்பையும் தரும் சீரழிந்த வேலையையே இவ்வாறு பிரிந்து நிற்பதன் மூலம் – பிரித்து வைப்பதன் மூலம் – தாங்கள் செய்கின்றோம் என்பது இந்தத் தரப்புகள் அனைத்துக்கும் ஐயம் திரியற – சந்தேகத்துக்கு அப்பால் – நன்கு தெரியும்; நன்கு புரியும்.

ஆனால், பதவிக் கதிரைக்கான பேரவா – பேராசை – இவையெல்லாவற்றையும் தாண்டி ஒருவரை ஒருவர் வீழ்த்தும் சிறுமையைத் தொடர்ந்து தூண்டி நிற்கும். இதுவேதான் இப்படிக் குழு பிரிந்து, கூட்டணி கட்டி, கூட்டமைப்பு சமைத்து, மோதுகின்ற தப்பிலித்தனத்துக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் அரசியல் சிறுமைத்தனம்.

ஆண்டாண்டு காலமாக பதவிக் கதிரைக் கவசத்தை அனுபவிப்பவர்கள் அதை விட்டுக் கொடுக்க இடம் தரார். அதைக் கண்வைத்து, அந்த நப்பாசையில் அலைபவர்களும் அதற்கான ஒரே இலக்கிலிருந்து விலகார்.

இனத்தின் விடுதலை என்ற உயரிய இலட்சியத்தை முன்னிறுத்தி, தமிழர் தேசத்தின் பெயரால், தேசியத்தின் பெயரால், நடக்கும் இந்த அரசியல் பதவிக்கான ரணகளத்தில் பெரும் பின்னடைவைக் கண்டு, மேலும் இழப்பையும் துயரத்தையும் சந்திக்கப்போவது என்னவோ தமிழினமும் தமிழர் தேசமும்தான்.

தேசத்தின் – தேசியத்தின் – பெயரால் முட்டி மோதுபவர்களுக்கு இந்த அடிப்படை புரிந்தாலும், புரியாதவர்களாகத் தொடர்வதே அவர்கள் போக்கு. அதுவே நம் தலைவிதி.

# வாக்குகளை சிதறடிக்க முனைகின்றார் விக்கி!

## ஸ்ரீநேசன் எம்.பி. குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, பெப். 12

வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமைப் பதவிக்கு ஆசைப்பட்டு ஒரு தனிக்கட்சியை உருவாக்கி, தெற்கில் உள்ள பேரினவாதிகள் விரும்புவது போன்று வாக்குகளைச் சிதறடிக்கின்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாற்றுத் தலைமை என்கின்ற விடயத்தை மையப்படுத்தி தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பை வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உருவாக்கியுள்ளார் என அறிந்துள்ளோம். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டு அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்.

அதன் பின் அவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கு வரவேண்டும் என்று ஆசை கொண்டவர். கடந்த கலங்களில் கூட மாற்றுத் தலைமை என்கின்ற விடயத்தைக் கையில் எடுத்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். இதன் ஊடாக அவர் ஒரு தலைவராக வரவேண்டும் என்பதில் குறியாக இருந்து வருகின்றார் என்பது தெளிவாகின்றது.

பொதுவாகவே விக்னேஸ்வரன் முன்னுக்குப் பின் முரணான கருத்துகளையே கூறிவருகின்றார். அவரது முதுமை அரசியல் சார்ந்த முதுமை அல்ல. நாடாளுமன்றத்தில் வென்று எம்மோடு இணைந்து செயற்பட விரும்புகின்றார் என்றால், கொள்கையளவில் ஒத்துச் செல்லக் கூடிய கட்சியுடன் தலைமைப் பதவியின்றி அவரால் செயற்பட முடியாதா? தேர்தலுக்கான கூட்டணி இல்லை என்று கூறுகின்றார். ஆனால் தேர்தலின்போதுதான் இந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.

இது மட்டுமல்ல, அந்த வேளையில் நான் ஓய்வுக்குப் பின்னர் சிவ சிவா என்று ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தபோது என்னை அரசியலில் நிறுத்தி சிக்கல்படுத்திவிட்டார்கள் என்று கூறினார். ஆனால் இப்போது அந்த அரசியலுக்கும் மேலாகச் சென்று ஒரு தனிக்கட்சியை உருவாக்கி தெற்கில் உள்ள பேரினவாதிகள் விரும்புவது போன்று வாக்குளைச் சிதறடிக்கின்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார் – என்றார்.(ஐ)

# ஏழுமலையான் கோவிலில் மஹிந்த சுவாமி தரிசனம்

## தங்க நாணயங்கள் காணிக்கை







புதுடில்லி, பெப். 12

இந்தியா சென்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்திய பிரதமர் மோடியைச் சந்தித்த பின்னர் பல்வேறு கோவில்களில் சாமி தரிசனம் செய்து வருகிறார். நேற்று அவர் திருப்பதியில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அவர் தனது பயணத்தின் இறுதியாக திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்வதற்காக நேற்றுமுன்தினம் மாலை ரேணிகுண்டா விமான நிலையம் சென்றார்.

விமான நிலையத்தில் அதிகாரிகள் வரவேற்புக்கு பிறகு திருமலைக்குச் சென்ற மஹிந்த, திருமலையில் உள்ள பத்மாவதி விருந்தினர் மாளிகையில் இரவு தங்கினார். நேற்றுக் காலை நடைபெற்ற அஷ்டதள பாத பத்ம ஆராதனை சேவையில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தார்.

முன்னதாக கோவில் நுழைவாயிலில் தேவஸ்தான செயல் அலுவலர் அனில்குமார் சிங்கால், அர்ச்சகர்கள் இஸ்தி கப்பால் மரியாதையுடன் மஹிந்தவை கோவிலுக்குள் அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்தனர்.

சுவாமி தரிசனத்துக்குப் பிறகு தங்க நாணயங்களை காணிக்கையாகச் செலுத்திய மஹிந்த, பின்னர் தங்கக் கொடி மரத்தைத் தொட்டு வணங்கி தரிசனம் செய்தார். இதையடுத்து ரங்கநாதர் மண்டபத்தில் வேத பண்டிதர்கள் வேத ஆசிர்வாதம் செய்து வைக்க தேவஸ்தான அதிகாரிகள் தீர்த்த பிரசாதங்களை வழங்கினர்.

இதையடுத்து நேற்று முற்பகல் 10.30 மணிக்கு திருமலையில் இருந்து ரேணுகுண்டா விமான நிலையம் சென்ற பிரதமர் அங்கிருந்து சிறப்பு விமானத்தில் கொழும்பு திரும்பினார்.

## நாளை 13.02.2020 – வியாழக்கிழமை

நட்சத்திரம்: அத்தம் பி.ப.02.38 வரை
திதி : பஞ்சமி சித்தம் பி.இ. 02.34 வரை
இராகுகாலம் : 02.04 – 03.34
சுப நேரம் : 08.04 – 09.34

# வௌவால் போல் தொங்கும் எஸ்.பி. தன்னைப் பற்றி கவலைப்படட்டும்!

## மனோ கணேசன் எம்.பி. காட்டம்



கொழும்பு, பெப். 12

எமது தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் இராதாகிருஷ்ணன், எமது கூட்டணியின் சார்பில் நாம் உருவாக்கிவரும் புதிய எதிரணிக் கூட்டணியில் நுவரெலியா மாவட்ட வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெறுவார். அதை நமது கூட்டணியும், கூட்டணி கட்சியான மலையக மக்கள் முன்னணியும், நமது மக்களும் கவனித்து கொள்வார்கள்.

எஸ்.பி.திசாநாயக்க, தனக்கு எங்கே வேட்பாளர் நியமனம் கிடைக்கப்போகின்றது என்பதைப் பற்றி கவலைப்பட வேண்டும். அவரது கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை, பொதுஜன பெரமுன கழற்றிவிட்டு விட்டது. எனவே மொட்டுக்கும், நாற்காலிக்கும் இடையில் வௌவால் போல பரிதவித்துத் தொங்கும் எஸ். பி. திசாநாயக்க, முதலில் தன்னை பற்றிக் கவலைப்படவேண்டும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கூறியுள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி., தங்களுடன் இணைந்து போட்டியிடப் பேச்சு நடத்துகிறார் என முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கூறியிருந்தார்.

அவருக்குப் பதிலளித்த கூட்டணியின் பிரதித் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி., திசாநாயக்காவின் கூற்றை மறுத்தார். அத்தகைய எந்தப் பேச்சும் நடத்தவில்லை என மறுத்த அவர், தான் கூட்டணியின் வேட்பாளராகப் புதிய எதிரணி கூட்டணியிலேயே போட்டியிடப்போவதாக கூறியிருந்தார்.

இதுபற்றி கூட்டணி தலைவர் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது: –

கடந்த தேர்தலில் தோல்வியடைந்து, பின்னர் நாம் பதவிக்கு கொண்டு வந்த ஜனாதிபதி மைத்திரிபாலவின் தோளில் தொங்கி, தேசியப் பட்டியல் நியமனம் பெற்று, நாடாளுமன்றம் வந்து, எமது அமைச்சரவைக்குள்ளும் நுழைந்து எமது அரசை நாசம் செய்த எஸ்.பி.திசாநாயக்க, தேர்தலில் வெற்றி பெற்று வந்த எமது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் இராதாகிருஷ்ணன் தொடர்பில் பேசுவது நகைப்புக்குரியது.

எஸ்.பி.திசாநாயக்க, அரசியல் தகிடுதத்தம் செய்து இந்த முறையும் எவரது தோளிலாவது சவாரி செய்து நாடாளுமன்றம் வர எத்தனிப்பது நன்கு தெரிகிறது. இம்முறை தோள் பாய்ச்சலுக்கு இடம் கிடையாது. சொந்த முயற்சியில் தான் வர வேண்டும்.

இந்த முறை எஸ். பி. திசாநாயக்கவுக்கு தேசியப் பட்டியல் நியமனம் எதுவும் கிடைக்க போவதும் இல்லை என்பது நிச்சயம். மொட்டா, நாற்காலியா என்ற இறுதித் தீர்மானமும் இதுவரை இல்லை. இந்நிலையில் தனது எதிர்காலமே கேள்விக்கு உள்ளாகி இருக்கும் வேளையில் அடுத்தவரை பற்றி பேசுவதை நிறுத்தி விட்டு, தன்னை பற்றி அவர் கவலைப்பட வேண்டுமென நினைக்கிறேன் – என்றார்.

# மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.12

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

ஒலுமடுவிலிருந்து ஒட்டிசுட்டான் வரை, ஒட்டி சுட்டானிலிருந்து மன்னன்கண்டல் வரை, ஒட்டி சுட்டானிலிருந்து முத்தையன் கட்டு வரை, ஒட்டி சுட்டானிலிருந்து நெடுங்கேணி வரை, நெடுங்கேணியிலிருந்து வெடிவைத்தகல் வரை, நெடுங்கேணியிலிருந்து பெரியஇத்திமடு வரை, நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் வரை, பழப்பதனிடும் தொழிற்சாலை, 642 ஆம் இராணுவ படைப் பிரிவு முகாம், நெடுங்கேணி, பல நோக்கு கூட்டுறவு சங்க அரிசி ஆலை நெடுங்கேணி, ஞானகலா, 64 ஆம் இராணுவ படைப்பிரிவு முகாம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்-**

மதவுவைத்தகுளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், கமாங்குளம் கிராமம், சாம்பல் தோட்டம், இலுப்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடை இருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# 'படம் காட்டிய' இளைஞர்களின் மோட்டார் சைக்கிள்கள் பறிப்பு!

வவுனியா, பெப். 12

வவுனியா வைரவபுளியங்குளம், குருமன்காடு, பூங்கா வீதிகளில் மாலை வேளைகளில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்களைப் பயமுறுத்தும் பாணியில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞர்கள் சிலர் பொலிஸாரிடம் வசமாகச் சிக்கினர்.

நேற்று முன் தினம் இவர்கள் போக்குவரத்து பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டு மோட்டார் சைக்கிள்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்க தெரிவித்தார்.

வவுனியாவில் பல வீதிகளில் இளைஞர்களினால் செலுத்தப்படும் மோட்டார்சைக்கிள்கள் அதிகவேகத்துடனும் பொதுமக்கள், மாணவர்களை அச்சுறுத்தும் சத்தங்களுடனும் செலுத்தப்பட்டு வருகின்றன. இதையடுத்து அந்தப் பகுதிகளில் போக்குவரத்துக் கடமைகளை மேற்கொண்டு வரும் போக்குவரத்துப் பொலிஸார் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திய நான்கு இளைஞர்களுடைய மோட்டார் சைக்கிள்களை கைப்பற்றியமையுடன் அவர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் கூறினர். (ஐ)

# வாள்வெட்டில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 12

சாந்தை பகுதியில் நேற்று முன்தினம் மாலை வளர்ப்பு நாயினால் உருவான வாய்த்தர்க்கம் வாள்வெட்டில் முடிந்துள்ளது. இதில், படுகாயமடைந்த 3 பேர் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள ஒருவர் வளர்த்து வந்த நாய், வெளியே சென்றவேளை அடித்துத் துன்புறுத்தப்பட்டு குற்றுயிராகக் கிடந்துள்ளது. இதனையடுத்து நாயின் உரிமையாளர் கோபமடைந்து வாயில்லாத ஜீவனை அடித்துத் துன்புறுத்துவதா? எனப் பேசியிருக்கின்றார். இதனையடுத்து அயல் வீட்டார் நாயின் உரிமையாளருடன் தாக்கப்பட்டுள்ளார்.

அந்தத் தாக்கம் மேலும் முற்றிய நிலையில் அயல் வீட்டிலிருந்தவாகள் நாயின் உரிமையாளர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தியதுடன், அவருடைய வீட்டுக்குள் புகுந்தும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் காயமடைந்த 3 பேர் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தசம்பவத்தையடுத்து இளவாலைபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு வடக்கு ஆளுநர் ஆலோசனை



யாழ்ப்பாணம், பெப். 12

வடக்குமாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் தமக்கான தொழிவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள அரசு தரும் வாய்ப்பை உரிய நேரத்தில் சரியான ஒழுங்கு முறையை பின்பற்றிப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியை தாமதமின்றி மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சார்ள்ஸ் ஆலோசனைவழங்கியுள்ளார்

தொழில் வாய்ப்பின்றி இருக்கும் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் வேலைத் திட்டத்தில் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் தினம் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கானவயதெல்லை 45 ஆக அதிகரித்திருப்பதாகவும், விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் தினம் இந்த மாதம் 14 ஆம் திகதி என்றும் வயதெல்லை 38 ஆகக் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளமையை ஆளுநர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# ஆழ்துளைக் கிணற்றில் இருந்து வந்த பால் வண்ணத்தில் தண்ணீர்

## ஆந்திராவில் நடந்த அதிசயம்





ஆந்திராவில் விவசாயத்திற்காக போடப்பட்ட ஆழ்துளைக் கிணற்றில் இருந்து பால் போல் வெண்மையாக தண்ணீர் வந்ததை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

கர்னூல் மாவட்டம் கிரந்திவேமுலா கிராமத்தை சேர்ந்தவர் வெங்கட சிவா ரெட்டி எனும் விவசாயி. தன்னுடைய விவசாய நிலத்தில் வெங்கட சிவா ரெட்டி கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு ஆழ் துளை கிணறு அமைத்து, அதன் மூலம் விவசாய தேவைக்கு தண்ணீரை பாய்ச்சி வந்தார்.

இந்நிலையில், வயலுக்கு சென்ற வெங்கட சிவா ரெட்டி, வழக்கம்போல் நீர் இறைப்பதற்காக மின்மோட்டாரை போட்டுள்ளார். அப்போது போரிலிருந்து பால்போல் வெண்மையான தண்ணீர் வந்துள்ளது.

தகவலறிந்து வந்த விவசாயத்துறை அதிகாரிகள் வெங்கட சிவா ரெட்டியின் போரிலிருந்து வெளியான தண்ணீரின் மாதிரிகளை பரிசோதனைக்காக கொண்டு சென்றுள்ளனர்.

# இந்தியா - இங்கிலாந்து கூட்டு இராணுவப் பயிற்சி

இந்தியா, இங்கிலாந்து நாடுகளின் கூட்டு இராணுவப் பயிற்சி வரும் 13 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

அஜேயா வோரியர் என்ற பெயரில் தொடங்க உள்ள இந்தப் பயிற்சி இங்கிலாந்தில் உள்ள சாலிஸ்பெரி சமவெளியில் நடக்க உள்ளது. இந்தப் பயிற்சியில் இரு நாடுகளைச் சேர்ந்த 120 வீரர்கள் பங்கேற்க உள்ளனர் என இங்கிலாந்து தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது நகர்ப்புறங்களில் தீவிரவாத தாக்குதல்களைச் சமாளிப்பது குறித்தும் பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும் நவீன ஆயுதங்களை கையாளுதல் குறித்த பயிற்சியும் வழங்கப்படுவதாக இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.



# அமெரிக்க அதிபர் டிரம்ப் 24, 25 இல் இந்தியாவில்



வொஷிங்டன்,பெப்.12

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் அவரது மனைவி மெலனியா டிரம்ப் ஆகிய இருவரும் வருகிற 24 மற்றும் 25 ஆகிய இரு நாள்கள் இந்தியாவில் பயணம் மேற்கொள்கின்றனர் என வெள்ளை மாளிகை வெளியிட்டு உள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்காக இந்தப் பயணம் அமையும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் டிரம்ப் மற்றும் இந்திய பிரதமர் மோடி இருவரும் தொலைபேசி வழியே பேசிஜ் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயணத்தில் புதுடெல்லி மற்றும் குஜராத் ஆகிய பகுதிகளுக்கு இருவரும் செல்கின்றனர். நாட்டு விடுதலைக்காக போராடிய மகாத்மா காந்தி மற்றும் பிரதமர் மோடியின் சொந்த மாநிலம் என்ற வகையில் இவர்களது பயணத்தில் குஜராத் இடம்பெற்றுள்ளது.

இரு நாட்டு உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் கடந்த செப்டம்பரில் அமெரிக்காவின் ஹூஸ்டன் நகருக்கு சென்ற பிரதமர் மோடியை வரவேற்ற டிரம்ப் விருந்து வழங்கினார். இந்த பயணத்தில் பிரதமர் மோடியை கௌரவிக்கும் வகையில் 'ஹவுடி மோடி' என டிரம்ப் குறிப்பிட்டார்.

# டெல்லி தர்பார் 3ஆவது முறை கெஜ்ரவாலின் ஆம் ஆத்மியிடம்

## பா.ஜ.கவை வீழ்த்தி அக்கட்சி பெருவெற்றி



புதுடெல்லியில் மூன்றாவது முறையாக ஆட்சியமைக்கும் வகையில் அதிக தொகுதிகளில் ஆம் ஆத்மி கட்சி வேட்பாளர்கள் முன்னிலை பெற்றிருப்பதால் அக்கட்சியினர் வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

டெல்லி மாநிலத்தில் 70 உறுப்பினர் கொண்ட சட்டசபைக்கு கடந்த 8ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடந்தது. இதில் 62.59 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி பலத்த பாதுகாப்புடன் நேற்றுக் காலை தொடங்கி நடைபெற்றது.

வாக்கு எண்ணிக்கையின் ஆரம்பத்தில் இருந்தே ஆம் ஆத்மி கட்சி அதிக தொகுதிகளில் முன்னிலையில் இருந்த. ஆட்சியமைக்க 36 இடங்கள் தேவை என்ற நிலையில், ஆம் ஆத்மி கட்சி அதைவிட அதிக இடங்களில் முன்னிலை பெற்றது.

அந்தக் கட்சி 56 இடங்களிலும் பாரதீய ஜனதாக் கட்சி 14 இடங்களிலும் வெற்றியீட்டின. காங்கிரஸ் கட்சிக்கு ஓரிடமும் கிடைக்கவில்லை.

கெஜ்ரவோலின் ஆம் ஆத்மி கட்சி மிகப்பெரிய வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைக்கும் என தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகள் கூறியிருக்கின்றன. இதனை நிரூபிக்கும் வகையில் அந்த கட்சி, பெரும்பான்மைக்கு தேவையான இடங்களைவிட அதிக தொகுதிகளை கைப்பற்றியது .மூன்றாவது முறையாக தலைநகரில் ஆட்சியை பிடிக்க உள்ளதால், ஆம் ஆத்மி கட்சியினர் மிகுந்த உற்சாகத்தில் உள்ளனர்.

வாக்கு எண்ணிக்கை தொடங்குவதற்கு முன்பாவகே ஆம் ஆத்மி கட்சி தலைமையகத்தை பலூன்களாலும், கட்அவுட்டுகளாலும் அலங்கரித்து வைத்திருந்தனர். முன்னிலை நிலவரம் வெளியாகத் தொடங்கியதும் கட்சி தொண்டர்கள் உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

# அழிந்து வரும் பறவை இனமான கானமயில்களைப் பெருக்க திட்டமிட்ட நடவடிக்கை



முட்டைகளைச் சேகரித்து, 'இங்குபேட்டர்' மூலம் குஞ்சுபொரிக்க செய்து, அழிந்து வரும் பறவை இனமான கானமயில்களை பெருக்குவதில், இந்திய மத்திய வனத்துறை கவனம் செலுத்தி வருகிறது.

அழிவின் விளிம்பில் உள்ள இந்த பறவை இனத்தில், ராஜஸ்தான் பகுதியில் சுமார் 150 கானமயில்கள் மட்டுமே எஞ்சி உள்ளன.

இந்நிலையில், கானமயில் இனத்தை பாதுகாக்க, சுமார் 420 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தின் கீழ், ராஜஸ்தானின் இனப் பெருக்க மற்றும் வளர்ப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கானமயில்களை உயிரியல் வல்லுநர்கள் கண்காணித்து, அவை இடும் முட்டைகளை பாலைவனப் பகுதியில் இருந்து கவனமாக சேகரித்து வந்து, 'இங்குபேட்டர்' மூலம் பராமரித்து குஞ்சு பொரிக்க செய்கின்றனர். அப்படி அண்மையில் முட்டையில் இருந்து பொரிந்த 9 கானமயில் குஞ்சுகள் நன்றாக வளர்ந்து வருகின்றன.

இத்தகைய முயற்சியின் மூலம் கானமயில் இனத்தைக் காப்பாற்றிப் பெருக்க முடியுமா என்பதை தற்போது ஆய்வு செய்ய உள்ளனர்.

# மத்திய அரசின் அனுமதி பெறாமல் பாக். சென்றது இந்திய கபடி அணி

## புதிய சர்சை ஆரம்பம்

உலகக் கிண்ணக் கபடிப் போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய அணி வீரர்கள் எந்தவித முன் அனுமதியும் பெறாமல் பாகிஸ்தான் சென்றிருக்கின்றமை பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

உலகக் கிண்ணக் கபடிப் போட்டியை முதன் முதலாக பாகிஸ்தான் நடத்துகிறது. போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய அணி பாகிஸ்தான் சென்றுள்ளது. ஆனால், பாகிஸ்தான் செல்வது குறித்து விளையாட்டுத் துறை அமைச்சகத்திடம் இருந்து எந்தவொரு முன் அனுமதியும் பெறாதது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச போட்டிகளில் நாட்டின் சார்பாக பங்கேற்கும்போது விளையாட்டுத் துறை அமைச்சகம் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் அனுமதி அவசியம் என்று இருக்கும் நிலையில், இரண்டு அமைச்சகங்களும் அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# கொரோனாவுக்குப் பலியான ஐம்பதாயிரம் பேரின் சடலங்கள் எரிக்கப்பட்டன என அதிர்ச்சித் தகவல்

## அமெரிக்காவில் வசிக்கும் சீனக் கோடீஸ்வரர் வெளியிட்டார்

பெய்ஜிங்,பெப்.12

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடல்கள் எரிக்கப்பட்டிருக்கலாம் என அந்நாட்டைச் சேர்ந்த பெரும் கோடீஸ்வரரான குவோ வெங்குய் தெரிவித்துள்ளார்.

சீனாவில் கொரோனா வைரஸ் அசுர வேகத்தில் பரவி வருகிறது. வைரஸ் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கிறது. சீனாவின் பிற பகுதிகளை மட்டுமின்றி 28 நாடுகளுக்கும் அது வேகமாகப் பரவியது.

'கொரோனா வைரஸால் தற்போது வரை,1,110 பேர் உயிரிழந்துள்ளனர். 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்' என உலக சுகாதார அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் வசிக்கும், சீனாவைச் சேர்ந்த பெரும் கோடீஸ்வரரான குவோ வெங்குய் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில் –

வுகான் நகருக்குள் யாரும் நுழைய முடியாதபடி கட்டுப்பாடுகளை விதித்துள்ள சீன அரசு கொரோனா பாதிப்பால் உயிரிழந்தவர்களின் உடல்களை யாருக்கும் தெரியாமல் அங்கு எரித்து வருகிறது.

தினமும் 1,200 சடலங்கள் எரிக்கப்படுகின்றன. இதுவரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடல்கள் எரிக்கப்பட்டிருக்கலாம். மேலும், 15 லட்சம் பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், சீன அரசு இவை அனைத்தையும் மறைத்து வருகிறது' – எனத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சீன சுகாதாரத் துறை, 3.8 கோடி பேர் வசிக்கும் உகானில் 50 லட்சம் பேர் மாயமாகி உள்ளனர். அவர்கள் மூலமும் இந்த வைரஸ் பரவக் கூடும். அவர்கள் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம் எனத் தெரிவித்துள்ள நிலையில், குவோ வெங்குய்யின் கருத்து முக்கியத்து



வம் வாய்ந்தாக பார்க்கப்படுகிறது.

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடல்கள் எரிக்கப்பட்டிருக்கலாம் என சீன கோடீஸ்வரர் வெளியிட்டுள்ள தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# சீனாவுக்கு உலக சுகாதார அமைப்பின் சர்வதேச மருத்துவக் குழு விரைகின்றது



பீஜிங்,பெப்.12

சீனாவில் பரவி வரும் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், உலக சுகாதார அமைப்பு சீனாவுக்கு மருத்துவக் குழுவை அனுப்பி உள்ளது.

சீனாவின் ஹுபெய் மாகாணம் உகானில் தொடங்கிய கொரோனா வைரஸ் தாக்குதல் பல்வேறு நாடுகளுக்கும் பரவியுள்ளது. சீனாவில் இந்தத் தாக்குதலுக்கு இதுவரை பலியானவர்களின் எண்ணிக்கை 1,100 ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை 40,171 பேருக்கு இந்த வைரஸ் தாக்குதல் உறுதியாகி உள்ளது. 1.87 லட்சம் போ தொடர்ந்து மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். உலகளவில் 40,600 க்கும் மேற்பட்டோர் பாதிப்படைந்துள்ளனர். கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக டாக்டர்கள் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், சீனாவில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு வருவதை கட்டுப்படுத்த உலக சுகாதார அமைப்பின் தலைமையில் சர்வதேச மருத்துவ நிபுணர்கள் குழு ஒன்று நேற்று இரவு சீனா வர இருந்தது.

இந்தக் குழுவினர் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் பணியில் சீன அதிகாரிகளுக்கு உதவியாகப் பணியாற்றுவார்கள். முந்தைய பொது சுகாதார அவசரநிலை காலங்களில் பணியாற்றிய மூத்த நிபுணர் புரூஸ் அய்ல்வார்டு இந்த குழுவுக்குத் தலைமை தாங்கி உள்ளார்.

கடந்த 4 நாள்களாகக் கொரோனா வைரஸ் தாக்குதல் உறுதியான நோயாளிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கி உள்ளதாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் முயற்சியில் ஈரான் 4 ஆவது முறை தோல்வி!

தெஹ்ரான்,பெப்.12

தொடர்ந்து நான்காவது முறையாக செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் முயற்சியில் ஈரான் தோல்வியடைந்தது.

மற்ற உலக நாடுகளுக்கு இணையாக விண்வெளி திட்டத்தில் சாதிக்க வேண்டுமென ஈரான் தீவிர முனைப்புக் காட்டி வருகிறது. ஆனால் அந்த நாடு விண்வெளி திட்டத்தை ஒரு மறைவாக பயன்படுத்தி அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது. மேலும் இந்த விவகாரத்தில் ஈரான் மீது



அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது.

இந்தப் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியிலும் ஈரான் தனது விண்வெளி திட்டத்தை தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. ஆனாலும் விண்வெளி திட்டத்தில் ஈரான் தொடர்ந்து தோல்விகளைதான் சந்தித்து வருகிறது.

இந்த நிலையில் 'ஸாபர்' என்று பெயரிடப்பட்ட புதிய செயற்கைக்கோள் ஒன்றை சிர்மோர்க் ராக்கெட் மூலம் ஈரான் நேற்று முன்தினம் மாலை விண்ணில் செலுத்தியது. ஆனால் அந்த செயற்கைக்கோள் சுற்றுவட்டப்பாதையில் நுழைய முடியாமல் போனது. இதனால் இந்த திட்டம் தோல்வியில் முடிந்தது.

இது குறித்து ஈரான் ராணுவ அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், செயற்கைக்கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டது. நாம் நமது இலக்குகளை கிட்டத்தட்ட நெருங்கிவிட்டோம். ஆனால் 'ஸாபர்' திட்டமிட்டபடி சுற்றுப்பாதையை அடையவில்லை என கூறினார்.

இதன் மூலம் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தும் முயற்சியில் ஈரான் தொடர்ந்து 4 முறை தோல்வியைச் சந்தித்துள்ளது. கடந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மற்றும் ஓகஸ்டு மாதங்களில் நடந்த செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் முயற்சிகள் தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

# 24 அமெரிக்க ஹெலிகளை வாங்க இந்தியா ஒப்பந்தம்



இந்தியக் கடற்படைக்கு 24 ஹெலிக்கொப்டர்கள் வாங்குவது தொடர்பாக அமெரிக்காவுடன் விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாத இறுதியில் டிரம்ப் இந்தியா வரத்திட்டமிட்டுள்ளார். அதற்கு முன்னதாக, கடற்படைக்கு எம்.எச்.60 ஆர்.சீ. ஹாக் ரக ஹெலிக்கொப்டர்களை வாங்க இந்தியா ஒப்புதல் அளிக்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்காக இந்திய மதிப்பில் சுமார் 18 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியில் லொக்ஹீட் மார்ட்டின் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட உள்ளதாக மத்திய அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பொருள்களுக்கு இந்தியாவில் அதிகபட்ச வரி விதிக்கப்படுவதாக சமீபத்தில் டிரம்ப் குற்றஞ் சாட்டி இருந்தார். இந்நிலையில் அவரது கவனத்தைக் கவரும் வகையில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஆயிரத்தைத் தாண்டியது கொரோனா மரணங்கள்

கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது. சீன அதிபர் ஜி ஜின்பிங் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களிடையே காணொலிக் காட்சி மூலம் உரையாடி ஆறுதல் கூறியுள்ளார்.

சீனாவில் இருந்து பரவத் தொடங்கியுள்ள கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 13 ஆக உயர்ந்துள்ளது. சீனாவின் ஹூபே மாகாணத்தில் நேற்று ஒரே நாளில் மட்டும் 103 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தவிர ஒரே நாளில் 2 ஆயிரத்து 97 பேருக்கு கொரோனா பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. ஆயிரத்து 298 பேர் அபாய கட்டத்தில் இருக்கின்றனர் என சீன சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே வெப்பமான காலநிலை வந்தால் கொரோனா வைரஸ் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட வாய்ப்பு இருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். எனவே ஏப்ரல் மாதம் வரை இதன் தாக்கம் நீடிக்க வாய்ப்பிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாலைவன வெட்டுக்கிளிகள் உகண்டா மீது படை எடுப்பு

பாகிஸ்தான், சோமாலியா உள்ளிட்ட நாடுகளைப் பதம் பார்த்த பாலைவன வெட்டுக் கிளிகள் தற்போது உகாண்டாவை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கியுள்ளன.

லட்சக்கணக்கில் கூட்டம் கூட்டமாக வரும் வெட்டுக்கிளிகள் மேய்ச்சல் நிலங்களையும், பயிர்களையும் நாசம் செய்து வருகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட நாடுகள் அவசர நிலையை அறிவித்துள்ளன. இந்நிலையில் உகாண்டாவில் முகாமிட்டுள்ள லோகஸ்ட் வகை வெட்டுக்கிளிகள் கால்நடைகள் மற்றும் பயிர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன என அந்நாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு அளித்துள்ள தகவலின்படி ஒரு வெட்டுக்கிளி கூட்டம் சுமார் 60 கிலோ மீற்றர் நீளமும், 40 கிலோமீற்றர் அகலமும் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

உகாண்டாவின் முக்கிய ஏற்றுமதியான காபிச் செடிகளை வெட்டுக்கிளிகள் கபளீகரம் செய்வதால் பொருளாதாரம் பாதிக்கப்படுவதாகவும், அவற்றை அழிக்க ட்ரோன்கள் மூலம் மருந்து தெளிக்கப்படுவதாகவும் உகாண்டா அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.



# வடமாகாண சபை குறித்து பிரதமர் ராஜபக்ஷ இந்தியாவில் உண்மைக்கு மாறாகக் கருத்து!

## நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் விசனம்



யாழ்ப்பாணம்,பெப்.12

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குப் போய் வடக்கு மாகாண சபை குறித்து உண்மைக்கு மாறாகக் கருத்து வெளியிட்டுள்ளார் என்று குற்றம் சுமத்தியுள்ளார் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியின் செயலாளர் நாயகமும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

தமது ‘வாரத்துக்கொரு கேள்வி’ என்ற தலைப்பில் தாம் வழக்கமாக அனுப்பி வைக்கும் கேள்வி – பதில் அறிக்கையிலேயே அவர் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதன் விவரம் வருமாறு : –

கேள்வி : – வடமாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை விக்னேஸ்வரன் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றும் திருப்பி அனுப்பிவிட்டார் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவில் கூறியுள்ளாரே. அதுபற்றிஉங்கள் கருத்து?

பதில்: – பிரதமர் ராஜபக்ஷ இந்தியாவில் போய் எங்களைக் குறை கூறித் தனக்கு நற்பெயர் பெற்றுக்கொள்ளப் பார்க்கின்றாரா? அவர் உண்மையில் தெரியாமல் கூறினாரா அல்லது தெரிந்தும் எமக்கு மாசு கற்பிக்கக் கூறினாரா என்று தெரியவில்லை.

என்னுடைய ஐந்து வருட பதவிக்காலத்தில் ஒரு சதத்தையேனும் நாம் மத்திய அரசுக்குத் திருப்ப அனுப்பவில்லை.

முதலாவது, 2014 ஆம் வருடத்தில் 12,000 மில்லியன் ரூபா கேட்டோம். 1,650 மில்லியன் ரூபாதான் தரப்பட்டது என்று நினைக்கின்றேன். அப்படி இருக்கையில் திருப்பி அனுப்பக் காசெங்கு இருக்கின்றது? அதன் பின் வந்த வருடங்களில் ஒரு வருடத்தில் மூவாயிரத்து சொச்சம் தருவதாகக் கூறி பகுதிபகுதியாகத்தான் தரப்பட்டது. அதுவும் ஒருபகுதி அடுத்த வருடத்தில் தரப்பட்டது. அந்தக் காரணத்தினால் எங்கள் செயற்றிட்டங்களும் பாதிக்கப்பட்டன. தாமதம் அடைந்தன. நாங்கள் பதவியில் இருந்து வந்த பின்னர் சென்ற வருடம் கூட ஒரு பாரிய தொகை மத்திய அரசாங்கத்தால் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. ஆகவே பணத்தை மத்திய அரசாங்கம் எமக்குத் தராமல் இருந்து விட்டு நாம் திருப்பி அனுப்பினோம் என்று இந்தியாவில் சென்று எமது பிரதமர் கூறுவது விந்தையாக இருக்கின்றது.

இரண்டாவது, நாங்கள் உதாரணமாக 12,000 மில்லியன் கேட்டால் எமக்கு சுமார் பத்தில் ஒருபங்கைத் தந்துவிட்டு மிகுதி அனைத்தையும் மத்திய அமைச்சர்களுக்கு தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் கொடுத்து வந்துள்ளன. அவர்கள் அந்தப் பணம் அனைத்தையும் வடக்கிற்குச் செலவிடுவதாக பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் பிரசித்தப்படுத்துவார்கள். ஆனால் நடப்பது என்ன? அவர்களுக்குக் கிடைத்த பணம் அனைத்தையும் வட கிழக்குமாகாணத்திற்குஅனுப்புகின்றார்களோ என்பது ஒருபுறம் இருக்க அனுப்பப்படும் பணம் எமக்கு அனுப்பப்படுவதில்லை. அரசாங்க அதிபர்களுக்கே அனுப்புகின்றார்கள். அவர்கள் பலர் பணத்தைத் திருப்பி அனுப்புகின்றார்கள்என்றுகேள்வி. ஒருவேளை பணத்தைத் திருப்பி அனுப்புவதால்மத்தியின் கடைக்கண் பார்வை தமக்குக் கிடைக்கும் என்று அவர்கள் அவ்வாறு அனுப்புகின்றார்களோ அல்லது வேறு காரணங்களுக்காகத் திருப்பி அனுப்புகின்றார்களோ என்பது பற்றி அவர்களே எமக்கு அறிவுறுத்த வேண்டும். பிரதமர் பிற நாடுகளில் பேசும் போது உண்மையை அறிந்து பேச வேண்டும். உள்நாட்டில் அரசியல் மேடைகளில் பேசுவது போல் பேசக்கூடாது.

மூன்றாவதாக பிரதமருக்கு 1992 அம் ஆண்டின் 58 ஆம் இலக்கச் சட்டம் பற்றித் தெரியுமோ என்று எனக்குத் தெரியவில்லை. அதன்படி 13 ஆவது திருத்தச் சட்டத்தில் எமக்கு வழங்கப்பட்ட மிகக் குறைந்த அதிகாரப் பகிர்வில் மத்திய அரசாங்கம் தமக்கென ஒரு அதிகாரப் பகிர்வொன்றை மேற்கொண்டுள்ளது. அதாவது தந்த அதிகாரத்திலும் பாதிக்கு மேல் குறித்த இந்தச்ச்சட்டத்தின் ஊடாக மத்திய அரசாங்கம் எம்மிடம் இருந்து பறித்து விட்டது. அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர், கிராமசேவகர் ஆகியோர் 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் இருந்தனர். மேற்படிசட்டம் அவர்களை மத்திய அரசாங்கத்தின் கையாள்களாக மாற்றி விட்டது. அவர்கள் தான் பணத்தைத் திருப்பி அனுப்பி வந்துள்ளார்கள் என்று நினைக்கின்றேன்.

அதாவது மத்திய அரசாங்கத்தின் அலுவலர்களே எமக்கு உதவி புரிவதாக காட்டிக் கொண்டு எம் சார்பில் செலவிட



வேண்டியிருந்த பணத்தை மத்திய அரசாங்கத்திற்கு திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். அதைப் பிரதமர் அவர்களே பரிசீலித்துப் பார்க்க வேண்டும். அபாண்டமாக எம்மேல் பழிபோடுவதை அவர் நிறுத்தவேண்டும்.

அவரின் புரிதலுக்கு ஒன்றைக் கூற விரும்புகின்றேன். 2016ம் ஆண்டில் முழு இலங்கையிலும் இருக்கும் 850 க்கும் மேற்பட்ட திணைக்களங்கள், அமைச்சுக்கள் ஆகியவற்றில் சிறந்த நிதி நிர்வாகத்திற்காக எனது முதலமைச்சர் அமைச்சுதான் முதற் பரிசைப் பெற்றது. பிரதமரின் அமைச்சேதானும் அவ்வாறு எப்பவென்றாலும் பரிசு பெற்றதோ என்பதை அவர் தான் கூற வேண்டும். – என்றார்.

# விக்கியின் புதிய கூட்டணிக்கு பொதுஜன பெரமுன வரவேற்பு

கொழும்பு, பெப். 12

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வரவேற்றுள்ளது.

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் புதிய அரசியல் தலைமைத்துவங்கள் உருவாகினாலும் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்குத் தற்போதைய அரசுடன் இணைந்து பணியாற்றுமாறும் அந்தக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி என்ற பெயரில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைலையில் புதிய அரசியல் கூட்டணியொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இதனை வரவேற்றிருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான ரோஹித அபேகுணவர்தன, அரசுடன் இணைந்து செயலாற்ற முன்வருமாறும் அழைப்பு விடுத்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் –

விக்னேஸ்வரன் புதிய கூட்டணி ஒன்றை அமைத்து அறிவிப்பு ஒன்றையும் விடுத்திருந்தமையை அவதானித்திருந்தோம். அதில் சிங்கள மக்கள் குறித்து சில கருத்துக்களையும் வெளியிட்டிருந்தார்.

ஜனநாயக ரீதியில் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கான உரிமை அனைவருக்கும் இருக்கின்றது. எவ்வாறாயினும், வடக்கில் யாதொரு தலைவர் உருவாகினாலும் தற்போதைய அரசுடன் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்நோக்கி நகர்வதே சிறந்ததாகும். வடக்கு மக்கள் எப்போதுமே கேட்கின்ற ஒன்றுதான் அதிகாரங்களைத் தாருங்கள் என்பதாகும். பிரதமர் மஹிந்த ஜனாதிபதியாக இருந்த போது வடக்கு மாகாண சபையை அமைத்தால் நிச்சயம் அங்கு தோல்வியே மிஞ்சும் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடையும் என்பது நன்கு உணரப்பட்டது போல வடக்கு மாகாணத்தில் நாங்கள் தோல்வியடைவோம் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தோம்.

ஜனநாயக ரீதியில் வடக்கு மாகாண சபையை அமைத்து தேர்தலும் நடத்தினோம். முதலமைச்சர் ஒருவர் தெரிவாகினார். ஆனாலும் இப்படி வடக்கு மாகாண சபை மற்றும் அதிகாரங்களைக் கொடுத்து அவர்கள் என்னதான் செய்து கொண்டார்கள்? மக்கள் ஆணை மற்றும் அரசமைப்பின் ஊடாக முதலமைச்சர் அதிகாரம் என்பன கொடுக்கப்பட்டிருந்தும் அவர்கள் மக்களுக்காக என்ன செய்தார்கள்? ஆகவே வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தலைவர்கள் உருவாக வேண்டும் என்பதோடு அரசுக்கு எதிராக அல்லாமல் அரசுடன் ஒத்துழைத்து மக்களுக்குப் பணிபுரிய வேண்டும். அதற்காக நாங்கள் அழைப்புவிடுக்கின்றோம்–என்றார்.

# கரைச்சி பிரதேச சபையினருடன் ஆஸ்திரேலியத் தூதுவர் சந்திப்பு!

கிளிநொச்சி, பெப். 12

கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் டேவிட் ஹோலி நேற்றுப் பகல் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நேற்று முற்பகல் 11.45 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் தற்போதைய நிலைமைகள், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிரதேச சபையின் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், சபை உறுப்பினர்கள், சபையின் செயலாளர் கா.சண்முகதாசன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஐ)



# ராஜகிரிய விபத்தில் நான்கு பேர் காயம்

கொழும்பு, பெப். 12

இராஜகிரிய மேம்பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 4 பேர் காயமடைந்துள்ளனரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை இரண்டு கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது. (ஐ)

# தமிழ் இளைஞரைப் பாதிக்கும் செயற்பாடுகளை இனங்கண்டு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்

## பொலிஸ் அத்தியட்சரிடம் கமலராஜ் குருக்கள் கோரிக்கை



யாழ்ப்பாணம், பெப். 12

தமிழ் இளைஞர்களைப் பாதிக்கும் செயற்பாடுகளை இனங்கண்டு, அவற்றை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என வண்ணை வீரகாளி அம்மன் ஆலயக் குரு கமலராஜக் குருக்கள் யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக மனோஜ் ரணவல தனது பதவியினை நேற்றுக் காலை 7.36 மணி சுபநேரத்தில் பொறுப்பேற்றார்.

கொழும்பு மத்திய பிரிவின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய மனோஜ் ரணகல, இடமாற்றலாகி நேற்று யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக பதவியேற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக பதவியேற்றுள்ள மனோஜ் ரணவல, தமிழ் இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான காரணத்தைக் கண்டுபிடித்து, மக்களின் மனதில் இடம்பிடிக்க வேண்டும். அத்தோடு யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர் சமுதாயத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பும் உங்கள் கையிலே உள்ளது. எனவே இன்று பொறுப்பேற்க நீங்கள் உங்களுடைய வேலைத்திட்டங்களை சிறப்பாகவும் பன்மடங்கு ஆகவும் செய்யவேண்டிய தேவையுள்ளது என்றும் கமலராஜக் குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பதவியேற்பு நிகழ்வில் மதகுருமார்களின் ஆசியுரையின் போது அவர் இவ்வாறு வலியுறுத்தினார். (ஐ)

## 2019 இறுதியில் பட்டம் பெற்ற காலப்பகுதியில் இருந்து தொழிலற்றுள்ள பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, பெப். 12

2019 ஜனவரி முதலாம் திகதி முதல் 2019 டிசெம்பர் 31ஆம் திகதி வரை பட்டப் படிப்பை நிறைவு செய்துள்ள அந்தக் காலப்பகுதியில் (பட்டம் பெற்ற திகதி முதல்) வேலை வாய்ப்பற்றிருக்கும் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்புக்கு விண்ணப்பிக்க முடியும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பட்டம் பெற்று ஒருவருடத்துக்கு மேலாக தொழில்வாய்ப்பற்றிருக்கும் பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியும் என்ற நிபந்தனையே இவ்வாறு தளர்த்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கேற்ப வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள், குறித்த விண்ணப்பதாரிகள் ஒரு வருடத்துக்கு அதிக காலம் தொழில் வாய்ப்பற்றவராக இருக்கவேண்டும். விண்ணப்பிக்கும் பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர பதிவைக் கொண்டவராகவும் இருப்பதைக் கிராமசேவகர் ஊடாகப் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்த வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ள பட்டப் பாடநெறி ஒன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையினைக் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறி ஒன்றை 2019.12.31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுசெய்துள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

2019.01.01ஆம் திகதி முதல் 2019.12.31ஆம் திகதி வரை பட்டப் படிப்பை நிறைவு செய்துள்ள குறித்த காலப்பகுதியில் (பட்டம் பெற்ற திகதி முதல்) வேலை வாய்ப்பற்றிருக்கும் அனைத்து பட்டதாரிகளுக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்று ஜனாதிபதி செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## யாழ்ப்பாண எஸ்.எஸ்.பியாக மனோஜ் ரணகல பதவியேற்பு

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ்



அத்தியட்சகராக மனோஜ் ரணகல தனது பதவியை நேற்றுக் காலை 7.36 மணிக்கு சுபநேரத்தில் பொறுப்பேற்றார்.

கொழும்பு மத்திய பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய மனோஜ் ரணகல இடமாற்றலாகி நேற்று யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியேற்று க்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தற்போது கொழும்புக்கு இடம் மாற்றலாகி சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மும்மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் தனது பதவியினைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஐ - 07)



## பஸ்ஸிலிருந்து இழுத்துச் சென்று இளைஞன் மீது கடும் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 11

கைதடியில், நேற்றுமுன்தினம் மதியம் பஸ்ஸில் பயணம் செய்த இளைஞன் ஒருவர் மர்மக் கும்பலால் சரமாரியாக தாக்கப்பட்டுள்ளார்.

பிறந்தநாள் விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இளைஞன் பஸ்ஸில் பயணம் செய்துள்ளார்.

பஸ் கைதடியை அடைந்ததும், வழிமறித்த 15 பேர் கொண்ட இளைஞர் குழு, அந்த இளைஞனை அருகிலுள்ள வயல்வெளிக்கு இழுத்துச் சென்று சரமாரியாகத் தாக்கியுள்ளனர்.

பின்னர், வீதியோரமாக அவரைப் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இளைஞன் தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களினால் இந்தத் தாக்குதல் நடந்திருக்கலாமெனக் கருதும்பொலிஸார், அது குறித்துவிசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

## தினமும் இனங்காணப்படும் 64 புதிய புற்றுநோயாளிகள்!

கொழும்பு, பெப். 12

இலங்கையில் தினமும் புற்றுநோயினால், 38 பேர் உயிரிழக்கின்றனர் என்றும், தினமும் 64 புதிய நோயாளிகள் இனம் காணப்படுகின்றனர் எனவும் சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சமூக பொது மருத்துவ நிபுணர் டாக்டர் சூராஜ் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று கொரோனா வைரஸ் குறித்து செலுத்தப்படுகின்ற கவனம் புற்றுநோய்கள் தொடர்பில் செலுத்தப்படுவதில்லை. புற்று நோய்கள் காரணமாக உலகம் முழுவதும் ஒவ்வொரு நிமிடமும் 17 பேர் உயிரிழக்கின்றனர். இவ்வாறான ஆபத்தை கொரோனா தோற்றுவிக்கவில்லை.

புற்றுநோய்கள் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் 2018 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, உலகில் நுரையீரல் புற்றுநோய்க்கு ஆண்கள் அதிகளவில் உள்ளாவதாகவும் இலங்கையில் வாய்ப்புற்று நோய்க்கே, அதிகளவான ஆண்கள் உள்ளாகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களை பொறுத்தவரை உலகில் மாத்திரமல்லாமல் இலங்கையிலும் மார்புப் புற்று நோய்க்குத்தான் அதிகம் உள்ளாகின்றனர்.

இலங்கையின் உத்தியோகபூர்வ தகவல்களின் படி 2018 ஆம் ஆண்டில் 23 ஆயிரத்து 530 பேர் புற்றுநோய்க்கு உள்ளாகினர் என இனம் காணப்பட்டுள்ளனர். இது நாளொன்றுக்கு 64 பேர்களாகப் பதிவாகியுள்ளது.

இந்நோயினால் அவ்வருடம் 14 ஆயிரத்து 13 பேர் (14013) பேர் உயிரிழந்துள்ளனர். இதன்படி 38 பேர் தினமும் இந்நோயினால் உயிரிழந்துள்ளனர்.

உலகில் மாத்திரமல்லாமல் இலங்கையிலும் மரணத்தை ஏற்படுத்தும் தொற்றா நோய்களில் இரண்டாவது இடத்தில் இருக்கும் புற்று நோயைத் தவிர்த்துக் கொள்வது தொடர்பில் மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் – என்றார். (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir



# கொல்கத்தா நைட்ரைடர்ஸ் களத்தடுப்பு பயிற்சியாளராக ஜேம்ஸ் போஸ்டர் நியமனம்!

இந்தியாவில் நடைபெறும் ரி – 20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்திற்கான தயார் படுத்தல்கள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஐ.பி.எல். ரி – 20 தொடர் மார்ச் 29ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இறுதிப்போட்டி மே 29ஆம் திகதி மும்பையில் நடைபெறவுள்ளது.

இத்தொடருக்கான ஏலம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொல்கத்தாவில் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், அந்த ஏலத்தில் ஒவ்வொரு அணிகளும் தங்களுக்குத் தேவையான வீரர்களை தேர்வு செய்தது.

இந்த நிலையில் ஒவ்வொரு அணிகளும் தங்களது அணிகளின் தலைவர்கள், பயிற்சியாளர்களை தேர்வு செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றன.

அந்த வகையில், ஐ.பி.எல். தொடரில் இரண்டு முறை சம்பியன் கிண்ணம் வென்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, புதிய களத்தடுப்புப் பயிற்சியாளரை நியமித்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளரான ஜேம்ஸ் போஸ்டரை கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக அணி நிர்வாகம் நியமித்துள்ளது.

ஜேம்ஸ் போஸ்டர் 2001ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை இங்கிலாந்து அணிக்காக ஏழு டெஸ்ட், 11 ஒருநாள் மற்றும் ஐந்து ரி – 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு அனைத்து வகையான கிரிக்கெட்டுகளிலிருந்தும் ஓய்வு பெற்ற ஜேம்ஸ் ஃபோஸ்டர், கவுண்டி அணியான கிளாமோர்கன் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார்.

இதுதவிர, பிக் பேஷ் லீக்கில் சிட்னி தண்டர், பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் குல்னா டைட்டன்ஸ், இங்கிலாந்து மற்றும் இங்கிலாந்து லயன்ஸ் ஆகிய அணிகளுடனும் தொடர்பில் உள்ளார்.

அசாம் மாநிலத்தைச் சேர்ந்த சுபாதீப் கோஷ், இதற்கு முன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக இருந்தார். ஆனால் தற்போது அவரை அணி நிர்வாகம் மாற்றியுள்ளது.

கடந்த வருட ஐ.பி.எல். தொடரில் முதல் 5 போட்டிகளில் நான்கில் வெற்றியடைந்த கொல்கத்தா அணி, பிறகு தொடர்ச்சியாக 6 போட்டிகளில் தோல்வியடைந்தது. பிறகு அடுத்தடுத்து 2 போட்டிகளில் வென்றது.

எனினும் இறுதி லீக் போட்டியில் தோல்வியடைந்ததால், புள்ளிகள் பட்டியலில் 5ஆம் இடம் பிடித்து பிளே ஒவ் சுற்றுக்குத் தகுதி பெறாமல் வெளியேறிவிட்டது.

எதிர்வரும் ஐ.பி.எல். தொடரை முன்னிட்டு கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்குள் பல மாற்றங்களை அணி நிர்வாகம் கொண்டு வந்தது.

இதில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக செயற்பட்டு வந்த தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் ஜெக் கலிஸ், நிர்வாகத்துடன் கலந்து ஆலோசித்து பரஸ்பர அடிப்படையில் அந்த பொறுப்பில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

அத்தோடு, உதவிப் பயிற்சியாளராக செயற்பட்டு வந்த ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் சைமன் கேடிச்சும் பதவியிருந்து விலகினார்.



இதனைத் தொடர்ந்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக 2008ஆண்டு முதல் 2010ஆண்டு வரையும், 2012ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையும் வீரராக பங்கேற்று அணிக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கிய பிரெண்டன் மெக்கலம் அணியின் பயிற்சியாளராக, நியமிக்கப்பட்டார்.

# மலிங்க – குசல் பெரேராவுக்கு ஈ.எஸ்.பி.என்னின் விருதுகள்

பிரபல கிரிக்கெட் விளையாட்டு இணையத்தளமான ஈ.எஸ்.பி.என். இணையத்தளம், ஆண்டுதோறும் மூன்று துறைகளிலும் சிறப்பாகப் பங்களிக்கும் நபர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிப்பது வழக்கம்.




இதற்கமைய கடந்த ஆண்டுக்கான விருது வென்றவர்களின் பட்டியலை ஈ.எஸ்.பி.என். இணையத்தளம், வெளியிட்டுள்ளது.

இதில் மூன்று துறைகளிலும் விளையாடும் வீரர், வீராங்கனைகள், அணிகள், நடுவர்கள் எனப் பலருக்கும் இதன்போது விருது வழங்கப்படுகின்றது.

ஆண்டின் சிறந்த ரி – 20 கிரிக்கெட் பந்துவீச்சாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் லசித் மலிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆண்டின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் பந்துவீச்சாளராக மேற்கிந்திய தீவுகளின் கெமார் ரோச் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் பந்துவீச்சாளராக நியூஸிலாந்தின் மெட் ஹென்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆண்டின் சிறந்த ரி – 20 கிரிக்கெட் துடுப்பாட்ட வீரராக ஆஸ்திரேலியாவின் கிளென் மக்ஸ்வெல் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆண்டின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரராக இலங்கை அணியின் குசல் பெரேரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆண்டின் சிறந்த ஒரு நாள் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரராக இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆண்டின் சிறந்த கிரிக்கெட் தலைவராக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஒரு நாள் மற்றும் ரி – 20 அணித்தலைவர் ஓய்ன் மோர்கன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆண்டின் சிறந்த கிரிக்கெட் அறிமுக வீரராக இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரர் ஜொப்ரா ஆர்சர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பெண்கள் கிரிக்கெட்டுக்கான சிறந்த துடுப்பாட்ட வீராங்கனையாக ஆஸ்திரேலியாவின் மெக் லேனிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பெண்கள் கிரிக்கெட்டுக்கான சிறந்த பந்துவீச்சாளராக ஆஸ்திரேலியாவின் எல்லீஸ் பெர்ரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# பாகிஸ்தான் வெற்றி!

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் மற்றும் 44 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 1 -0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

ராவல்பிண்டி மைதானத்தில் கடந்த 7ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 233 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொஹமட் மிதுன் 63 ஓட்டங்களையும், நஜ்முல் ஹொசைன் சந்தோஷ் 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஷாஹீன் அப்ரிடி 4 விக்கெட்டுகளையும், மொஹமட் அப்பாஸ் மற்றும் ஹரிஸ் சொஹைல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், நஷீம் ஷா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 445 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பாபர் அசாம் 143 ஓட்டங்களையும், ஷான் மசூத் 100 ஓட்டங்களையும், ஹரிஸ் சொஹைல் 75 ஓட்டங்களையும், அசாட் சபீக் 65 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், அபு ஜெயிட் மற்றும் ரூபெல் ஹொசைன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், தைஜுல் இஸ்லாம் 2 விக்கெட்டுகளையும், எபடொட் ஹொசைன் 1 விக்கெட்டினையும் விழ்த்தினர்.

212 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணியால், 62.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 168 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் மற்றும் 44 ஓட்டங்களால் வெற்றிபெற்றியை பதிவு செய்தது.

இதன்போது பங்களாதேஷ் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொமினுல் ஹக் 41 ஓட்டங்களையும், நஜ்முல் ஹொசைன் சாந்தோ 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், நஷிம் ா மற்றும் யாசிர் ஷா ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும், ஷாஹீன் அப்ரிடி மற்றும் மொஹமட் அப்பாஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 16 வயதில் ஹொட்ரிக் விக்கெட் வீழ்த்தி சாதனைப் படைத்த நஷிம் ஷா தெரிவு செய்யப்பட்டார்.



இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி கராச்சி மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# உலகக்கிண்ணம் வென்ற பங்களாதேஷ்; வெற்றிக்குப் பின்னால் இலங்கை வீரர்

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கிண்ணத்தைப் பங்களாதேஷ் வென்ற நிலையில் அதற்கு பின்னணியின் இலங்கை வீரரின் உழைப்பு இருப்பது தெரியவந்துள்ளது.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் இந்தியா – பங்களாதேஷ் அணிகள் நேற்று முன் தினம் மோதியது.

இப்போட்டியில் பங்களாதேஷ் அணி 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி உலகக்கோப்பையை வென்று வரலாற்று சாதனை படைத்தது.

ஐசிசி நடத்தும் கிரிக்கெட் தொடர்களில் பங்களாதேஷ் அணி இறுதிப்போட்டிக்கு சென்று கிண்ணத்தையும் வென்றது இதுவே முதல் முறையாகும்.

பங்களாதேஷ் அணியின் வெற்றிக்குப் பின்னால் இருப்பது அந்த அணியின் பயிற்சியாளரான நவீத் நவாஸ் தான்.

இவர் இலங்கை சர்வதேச கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஆவார்.

கடந்த 2018ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19 வயதுக்கு உட்பட்ட வங்கதேச அணியின் பயிற்சியாளராக நவீத் நியமிக்கப்பட்டார்.

நவீத் இலங்கை சர்வதேச கிரிக்கெட் அணிக்காக ஒரு டெஸ்ட் போட்டி மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று விளையாடியுள்ளார்.

இவர் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான இலங்கை அணியின் முன்னாள் தலைமை பயிற்சியாளராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலைக்கு முன்னால் நேற்று பகிடிவதைக்கு எதிராக போராட்டம்

## மகளிர் அமைப்புக்களின் ஏற்பாட்டில்








யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் பகிடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் போன்ற வன்முறைகளுக்கு எதிராகப் பெண்கள் அமைப்பினால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மகளிர் அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த போராட்டத்தில், ஏராளமான பெண்கள் கலந்துகொண்டு, பாலியல் வன்முறை மற்றும் பகிடிவதைக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

'மகிழ்ச்சியான பல்கலைக்கழக வாழ்க்கையை மரணத்தில் முடிக்காதே', 'தற்கொலை சிந்தனையை தூண்டும் பகிடிவதை தேவைதானா', 'நாட்டிலும் வீட்டிலும் பெண்கள் சமத்துவத்தைப் பேணுவோம்', 'பாலியல் கல்வி என்பது வாழ்க்கை பாடம்; தயக்கத்தை விட்டு கற்றுக்கொள்வோம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகளின் பெண் உறுப்பினர்களும் மகளிர் அமைப்புகளும் கலந்துகொண்டனர்.

## பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு; 65 பேருக்கு மீண்டும் விளக்கமறியல்

கொழும்பு, பெப். 12

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட காத்தான்குடிப் பிரதேசத்தைச்சேர்ந்த 65 பேரையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்க மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் றிஸ்வான் உத்தரவிட்டார்.

தடை செய்யப்பட்ட தௌ ஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் தலைமையிலான பயங்கரவாதிகள் மேற்கொண்ட இந்தத் தாக்குதலை அடுத்து, அம்பாந் தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் பயிற்சி பெற்ற மற்றும் அந்த அமைப்புடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தில் காத் தான்குடிப் பிரதேசத்தைச்சேர்ந்த 64 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட 64 பேரும் மட்டக்களப்பு நீவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அவர்கள் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்ட நிலையில் கடந்த மாதம் 2 பேர் பிணையில் விடுவிக்கப்பட 62 பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து வாரிய பொல பிரதேசத்தில் அண்மையில் கைது செய்யப்பட்ட காத்தான் குடியைச் சேர்ந்த 3 பேரையும் விளக்க மறியல்வைக்கப்பட்டிருந்த 62 பேருடன் சேர்த்து 65 பேரை நேற்றுச் செவ்வாய்கிழமை நீதிமன்றத்துக்கு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பொலிஸார் கொண்டு வந்தனர்.

இவர்கள் நீதிவான் ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில்






யாழ்ப்பாணம், பெப். 12

வடக்கு மாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் கௌரவிக்கும் விழா ஒன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை வடக்கு மாகாண கமத்தொழில் அமைச்சின் செயலாளர் தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், கௌரவ விருந்தினர்களாக தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையத்தின் பணிப்பாளர் சீ.பெரியசாமி மற்றும் கமத்தொழில்சார் வைத்தியர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், கமத்தொழில் சார் உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பண்ணையாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட ரீதியில் விவசாயம் பண்ணை வளர்ப்புப் பிரிவுகளில் மாவட்ட மட்டத்தில் முதலிடங்களை பெற்றவர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற்றது. (ஐ – 07)

# பொதுமக்களை அலைக்கழிக்கும் கிராம அலுவலர்களுக்குச் சிக்கல்

கொழும்பு, பெப். 12

கிராம சேவகர்களின் நடவடிக்கைகள் குறித்து கண்காணிப்பு நடவடிக்கையை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் விசாரணைக் குழு நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது. நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட அதிரடிச் சோதனைகளில் பல கிராம சேவகர்கள் சிக்கியுள்ளனர்.

அமைச்சின் கண்காணிப்புக் குழு நேற்று முன்தினம் முதற்கட்டமாகக் கொழும்பில் ஒரு பெரும் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது, 200 க்கும் மேற்பட்ட கிராம சேவகர் அலுவலகங்களில் அவர்கள் திடீர்க் கண்காணிப்பை மேற்கொண்டனர்.

கிராம சேவர்கள் தங்கள் கடமைகளைத் திறம்படச் செய்கிறார்களா அல்லது பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறார்களா என்பதைக் கவனத்தில் கொள்ள இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

நேற்று முன் தினம் காலை 8.30 மணியளவில், இந்தக் குழு கொழும்பு மாளிகாவத்தை, கொழும்பு கிழக்கு மற்றும் கெத்தாரம மேற்கு பகுதிகளில் உள்ள கிராம சேவகர் அலுவலகங்களுக்கு சென்றது.

பல கிராம சேவகர் அலுவலகங்களில் மக்கள் மணிக்கணக்கில் காத்திருந்தாலும், கிராம சேவகர்கள் அங்கு வரவில்லை என்பதைக் கண்டறிந்தனர். காலை 9.30 மணிக்குப் பிறகு மட்டுமே அவர்கள் அலுவலகங்களுக்கு வந்திருந்தன. இருப்பினும் முற்பகல் 11.00 மணிக்கும் அலுவலகங்களுக்கு வராத கிராம சேவகர்களும் அடையாளம் காணப்பட்டனர்.

பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் மற்றும் அவர்களின் பொறுப்புகளை மீறும் இந்தக் கிராம சேவகர்கள் தொடர்பான அறிக்கையை இந்தச் சிறப்புக் குழு தொகுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும். அதன் பிறகு, இதுபோன்ற தவறான கிராம சேவகர்கள் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சான்றிதழ்கள் மற்றும் பிற தேவைகளைப் பெற வந்த பலர் பெரும் சிரமத்துக்கு ஆளாக நேரிட்டது. சில சந்தர்ப்பங்களில், கிராம சேவகர்கள் இல்லாததால் அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன. பொதுமக்கள் பல மணி நேரம் காத்திருக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடமைகளைத் திறமையாகவும் நேர்மையாகவும் செய்யாத கிராம சேவகர்களைக் கைது செய்ய நாடு முழுவதும் இதேபோன்ற ஆய்வுகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# ஒரு லட்சம் அமெ. டொலர்களை வெளியே அனுப்பினார் ரிஷாத்!

## விமல் வீரவன்ஸ பரபரப்புத் தகவல்



கொழும்பு, பெப். 12

நல்லாட்சி அரசின் காலத்தில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தனது வங்கிக் கணக்கில் இருந்து ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை வெளியில் அனுப்பியுள்ளார் என அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளதெனக் கைத்தொழில் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இரண்டாவது தடவையாக மேலும் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களை அனுப்பத் தயாரான போது உயிர்த்த ஞாயிறு தொடர்பாக விசாரணை நடத்தும் பொலிஸ் பணியகம் இது பற்றி அறிந்து கொண்டதால் அந்தச் செயற்பாடு நிறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ரிஷாத் பதியுதீனுக்குச் சொந்தமான இடமொன்றை சோதனையிட்டதில் பல்வேறு நபர்களின் பெயர்களில் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளின் 227 புகைப்படப் பிரதிகள், 8 காணிகளின் மூலப்பிரதிகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் துரித விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபரிடமும் சி.ஐ.டி யிடமும் கோருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.


இவ்வாறு எத்தனை ஏக்கர் காணி பெறப்பட்டிருக்கும்? மோசடி செய்யப்பட்டவற்றில் சிறிதளவானவை குறித்தே தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்வரும் விசாரணைகளில் மேலும் பல தகவல்கள் அம்பலமாகும் – எனவும் அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசில் ரிஷாத் பதியுதீன் திரட்டிய பெருந்தொகை சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சி.ஐ.டி. விசாரணையில் வெளியாகும் எனவும் அவர் தெரிவித்தார்.



# பொதுத் தேர்தலில் ஐ.தே.க. யானையில் ஏறியே சவாரி!

## ரணில் திட்டவட்ட அறிவிப்பு



கொழும்பு, பெப். 12

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான கூட்டணி யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிடாத பட்சத்தில் அந்தக் கூட்டணியில் இணையாது தனித்து யானைச் சின்னத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை போட்டியிட வைப்பதெனக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

நேற்று முன் தினம் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு சஜித் பிரேமதாஸவின் புதிய அரசியல் கூட்டணிக்கு அங்கீகாரம் வழங்கி அதற்கு ரஞ்சித் மத்துமபண்டார எம்.பியைச் செயலராக நியமிக்க அனுமதியளித்தது.

அதேசமயம், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யானைச் சின்னத்தின் கீழ்தான் இந்த அரசியல் கூட்டணி தேர்தலில் இறங்கவேண்டுமென செயற்குழுவில் ரணில் தரப்பு வலியுறுத்தியிருந்தது.

ஆனால் புதிய அரசியல் கூட்டணி இதயம் சின்னத்தில் போட்டியிட ஏலவே உத்தேசித்துள்ளதால் நேற்று முன்தினம் கூட்டத்தில் எந்தப் பதிலையும் கூறாது சஜித் தரப்பு வெளியேறியிருந்தது.

அதனையடுத்து கட்சியின் முக்கியமான உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் இரவு நீண்ட மந்திராலோசனை நடத்திய ரணில், எதிர்வரும் தேர்தலில் யானைச் சின்னத்தில் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடுமெனத் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கூட்டணி அமைத்து வெளியாரின் சின்னத்தில் போட்டியிட இடமளித்தபோதும் இம்முறை கட்சியின் சொந்தச் சின்னத்தில் போட்டியிடுவதே நல்லது எனவும், புதிய அரசியல் கூட்டணி இதனை விரும்பாத பட்சத்தில் அவர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி சேராது எனவும் ரணில் திட்டவட்டமாக இங்கு தெரிவித்துள்ளார்.

ரணிலின் இந்த முடிவு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இப்போதிருக்கும் சர்ச்சையை மேலும் வலுப்படுத்தியிருக்கின்றது. (ஐ)

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் இதுவரை 103 முறைப்பாடுகள்

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இதுவரை 103 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நிலையில், முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட, அட்மிரல் டி.கே.பி. தஸநாயக்க உள்ளிட்ட கடற்படை அதிகாரிகள் குழுவால் 4 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் நிஷாந்த டி சில்வா ஆகியோரால் பொய்யான சாட்சிகள் வழங்கப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்காகச் சதி முயற்சி முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்து இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில், சாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணைக்குழுவால் நேற்று முன்தினம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம், அட்மிரல் டி.கே.பி. தசநாயக்க உள்ளிட்ட கடற்படை அதிகாரிகள் இருவர் 6 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கினர்.

எனினும் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட நேற்று முன்தினம் ஆணைக் குழுவில் ஆஜராகவில்லை.

அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமானமையுடன் இந்த நடவடிக்கைகள் எதிர் வரும் 20ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோட்டா - மஹிந்த - பஸிலை சந்திப்பதற்கு சு.கவினர் திட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்தராஜபக்ஷமற்றும் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருடன் அவசர பேச்சு ஒன்றை நடத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திட்டமிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, இவர்கள் மூவருடனும் கட்சியின் சில உறுப்பினர்களுடனும் முக்கிய பிரச்சினை தொடர்பாக விவாதிக்கவேண்டியுள்ளது எனக் கூறினார்.

மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடனான பரந்துபட்ட கூட்டணி இறுதி செய்யப்படவேண்டும் எனச் சுதந்திரக் கட்சி விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவின் கீழ் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடச் சுதந்திரக்கட்சி ஆர்வமாக இருக்கின்றது எனவும் தயாசிறி ஜயசேகர கூறினார்.

இருப்பினும் தமக்குச் சின்னம்தொடர்பாகஎவ்வித பிரச்சினையும் இல்லை எனத்தெரிவித்த தயாசிறி, ஆனால் கூட்டணி உருவாக்கப்படவேண்டும்எனத் தெரிவித்தார்.

## மன்னார் மனித புதைகுழி விவகாரம்:
## தகாதவார்த்தைப் பிரயோகத்தினால் வெளிநடப்பு செய்த சட்டத்தரணிகள்

மன்னார், பெப். 12

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடம் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தவழக்கின்போது அரச சட்ட வைத்திய அதிகாரி மற்றும் அவர்கள் குழு சார்பாக ஆஜராகிய அரச சட்டத்தரணி, பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையுடன் தகாத வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்தினார் எனவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ஆஜராகிய அனைத்துச் சட்டத்தரணிகளும், மன்னார் சட்டத்தரணிகளும் அந்த அரச சட்டத்தரணியின் வார்த்தைப் பிரயோகத்துக்கு எதிராக மன்னிப்புக் கோருமாறும் தெரிவித்து நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து வெளியேறினர்.

அதன் பின்னர் அந்தப் வார்த்தைப் பிரயோகத்துக்கு அரச தரப்புச் சட்டத்தரணி மன்னிப்பு கோரியமையைத் தொடர்ந்து மீண்டும் மன்னார் சதோசமனிதபுதைகுழிவழக்கு விசாரணக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது. (ஐ)

## நீதிபதி பிலப்பிட்டியவை உடனடியாக கைது செய்க!

### பதில் பொலிஸ்மா அதிபரை பணித்தார் சட்ட மா அதிபர்

கொழும்பு, பெப். 12

மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க எம்.பியுடன் தொலைபேசியில் பேசியமையும் நீதிமன்ற வளவில் இருந்து அந்த உரையாடல் நடந்திருப்பதும் உறுதியாகியுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதில் தாமதம் ஏன் என்று சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் வினவியுள்ளார்.

எனவே உடனடி ஏற்பாடுகளைச் செய்து நீதிபதியை சட்டத்தின் முன் கொண்டுவர நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் பதில் பொலிஸ் மா அதிபரை வலியுறுத்தியுள்ளார். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2020 இல் வெளியிடப்பெற்றது.